திராவிடன்

ஆசிரியர் : என். வி. நடராசன

[illegible] : 8 3-6-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணு மலர் : 43

சென்னையில் சிறப்புக் கூட்டம்

●

திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டு நிதி வசூலுக்காக, 5-6-55 காலை 9-மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெறும் **நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி** அவர்கள் தலைமையில் தோழர். **ஈ. வெ. கி. சம்பத்** அவர்கள் பேசுவார்.

நன்கொடை ரூ. 1, அணு 8.

—சென்னை மாவட்ட தி. மு. க.

நமது மகத்தான வெற்றி

ஆதிக்கபுரியினருக்கு காலம் கற்பிக்கும் பாடம்

ஒரு நாட்டின் நடைமுறைத் திட்டங்களையும், மற்ற சட்டங்களையும் இயற்றும் பாராளுமன்றத்தை நடத்துகின்ற தலைவர் அதாவது சபாநாயகர் என்பவர் பொது நோக்குக் கொண்டவர். அவர் நாட்டிலுள்ள எக்கட்சியினருடனும் சம்மந்தப்படாதவர். அவருக்கு சபையிலுள்ள பல்வேறு கட்சியினரும் அவசியம் மதிப்புத் தரவேண்டும். ஏனென்றால் அவர் நீதிபதிக்குச் சமமானவர்.

எப்படி நீதிபதி பார்பட்சமின்றி சட்டத்தின் துணை கொண்டு விசாரணை நடத்துகிறாரோ, அதேபோல பாராளுமன்றத் தலைவரும் பாராளுமன்றத்தை எந்தக் குறிப்பிட்ட கட்சிக்கும் தயை தாட்சண்யமின்றி பொதுநோக்குடன் நடத்தவேண்டும், பாராளுமன்றத் தலைவராவதற்கு முன்னர் அவர் எக்கட்சியைச் சேர்ந்தவரா யிருப்பினும், அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துவிட்ட பின்னர் கட்சி சார்பின்றி நடந்து கொள்ளுவது முக்கியம். பாராளுமன்றத் தலைவர் மேற்கண்ட முறைகளை யெல்லாம் அனுஷ்டித்தால்தான் சபையின் ஏகோபித்த மதிப்பைப்பெறலாம். இதுதான் ஜனநாயகம் வளர்ந்துள்ள நாடுகளிலே காணப்படும் முறையாகும்.

ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திலே ஜனநாயகம் படும் பாட்டையும், ஆளும் வர்க்கத்தினர் ஜனநாயகம் ஜனநாயகம் என்று வெறும் வாய்ச் சவடால் அடித்து வருவதையும் அறிவோம்.

*

சேலம் நகருக்கு 29-5-55-ம் நாளன்று வருகை தந்திருந்த டெல்லிப் பாராளுமன்றத் தலைவர் மாவ்லங்கர் அவர்களுக்கு சேலம் நகரசபை சார்பில் வரவேற்பு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது. அந் நிகழ்ச்சியின்போது தி. க., தி. மு. க.வைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர்கள் கோபால், வரதராசன் மற்றும் காங்கிரஸ் அல்லாத சில உறுப்பினர்களும், வரவேற்புக்கு ஆங்கிலத்தில் பதிலளித்து பேசிய டெல்லிப் பாராளுமன்றத் தலைவரைத் தமிழில் பேசுமாறு கேட்டுக் கொண்டனராம்.

அவருக்குத் தமிழ் தெரியாதென்றும் எனவே அவர் ஆங்கிலத்தில்தான் பதில் கூறுவார் என்றும், பிறகு அதைத் தமிழில் மொழி பெயர்த்துத் தாம் விளக்குவதாகவும் நகரசபைத் தலைவர் (காங்கிரஸ்) சமாதானம் தெரிவித்தாராம்!

நகரசபை உறுப்பினர்களான கோபால், வரதராசன் உள்ளிட்ட தோழர்கள் "டெல்லிப் பாராளுமன்றத்திலே அமைச்சர் ஒருவர் இந்தியிலே பேசியபோது—தென்னாட்டு உறுப்பினர்கள்பலர் இந்தி எங்களுக்குப் புரியவில்லை. தயவு செய்து ஆங்கிலம் அல்லது தமிழிலாவது பேசுங்கள் என்று வேண்டியசமயங்களில், பாராளுமன்றத் தலைவராகிய இவர் குறுக்கிட்டு **இந்தி புரியவில்லையென்றால் அதைக் கற்றுக் கொண்டு வாருங்கள்.** இதுவரை கற்றுக் கொள்ளாத உங்கள் தவறுக்காக அமைச்சரைப் பார்த்து இந்தியில் பேசாதீர்கள் என்று வற்புறுத்துவது ஒழுங்கல்ல என்று தீர்ப்பளித்து தென்னாட்டு உறுப்பினர்களை உட்கார வைத்து விட்டார். ஆகவே இனி தமிழ் நாட்டுக்கு வந்தால் தமிழ் கற்றுக் கொண்டு வாருங்கள்' என்று சொல்லி சபையைவிட்டு வெளிநடப்பு செய்திருக்கின்றனர் பாராளுமன்றத்தலைவரின் மொழி வெறியைக் கண்டிக்கும் வகையில் கருப்புக் கொடி காட்டி, "தமிழருக்கு துரோகியேதிரும்பிப்போ" "இந்தி ஆதிக்கம் ஒழிக" என முழங்கினர். இந்நிகழ்ச்சி சேலம் நகரில் ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யிருக்கிறது.

*

டெல்லிப் பாராளுமன்றத் தலைவருக்கு இந்நிகழ்ச்சி ஏற்பட்டது குறித்து நாம் சற்று வருந்துகிறோம். டெல்லிப் பாராளுமன்றத் தலைவரின் எதேச்சாதிகார போக்குக் குறித்து மனம் புண்பட்ட தோழர்களே மேற்படி கருப்புக் கொடி நிகழ்ச்சியை நடாத்தியிருக்கின்றனர்.

1938-ல் நமது இயக்கம் இந்தியை எதிர்த்தது. அப்போது நம்மை யெல்லாம் நையாண்டி செய்தனர் பலர். தாய்மார்களை கேலி செய்தனர், தாலமுத்து நடராசன் உயிர்களைபலி கொண்டார் ஆச்சாரியார். எந்த ஆச்சாரியார் ஆட்சி தமிழ்மொழியைக் காக்கப் புறப்பட்ட இருவீரர்களின் உயிரைக் குடித்தாரோ அதே ஆச்சாரியார் இன்று 18 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியை எதிர்க்கிறார்—அதுவும் நம்மைவிட தீவிரமாக—மறுக்க முடியாத சான்றுகளுடன்.

1938-ல் ஓடிய இந்தி, 1948-ல் ஓடிப்போன இந்தி, மீண்டும் 1955-ல் வரலாமா, அல்லது 1960-ல் வரலாமா என்று பார்க்கிறது. இத்தகைய ஏகாதிபத்திய போக்கை, நேரு சர்க்காரின் மொழி ஆணவத்தை தென்னாடு எதிர்க்கிறது என்ற ஒரு அறிகுறியைத்தான் சேலம் காட்டுகிறது. இதை பாராளுமன்றத் தலைவர் கண்டார். அவர் இதையே ஒரு எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டு மொழி ஆணவக்காரர்களின் மட்டரகப் போக்கிற்கு—நேரு சர்க்காரின் ஆதிக்க மனப்பான்மைக்கு அறிவுரை கூறுவார் என்றே எதிர்ப்பார்க்கிறோம்.

சேலம் நிகழ்ச்சி உண்மையிலேயே ஆதிக்க புரியினருக்கு காலம் கற்பிக்கும் பாடம். சேலம் நிகழ்ச்சி நம் இயக்கத்திற்கு ஏற்பட்ட ஒரு மகத்தான வெற்றி என்று கூறினாலும் மிகையாகாது.

—நக்கீரன்

சித்திரத்தைக் கண்டு சீற்றம் !

சர்க்கார் "அரிஜன நல பாதுகாப்பு" இலாகாவினர் விளம்பரப்படுத்தியுள்ள மேற்கண்ட சுவரொட்டிகளைக் கண்டு "இந்து" சீறுகிறதாம் !



நடந்த கதையின் நினைவுப்பாதை

அந்த இரண்டு நீலநிறக் கைக்குட்டைகளும் இதயத்திலே வேலாகி குத்திக் கொண்டிருந்தன சேகருக்கு! இன்ப மாளிகை இடிந்து துள் தூளாகிக் கொண்டிருந்தது. வளர்ந்த கனவு இடையே அறுந்தது. பீரங்கியின் வாயினருகிலே சேகர் நின்றான். வாழ்வுத் தொல்லைகள் குண்டாகி அவனைச் சுட்டுப் பொசுக்கக் காத்துக் கொண்டிருந்தன.

33

துன்பத் தொட்டிலிலே மனிதன் ஊஞ்சலாடும்போது உண்மையிலேயே சின்னஞ்சிறு குழந்தையாகத்தானாகிவிடுகிறான். சூழ்நிலையும், செயல்முறையையும் மறந்து துடிதுடிக்கிறான். அன்பு மொழிகூட சுடுகிறது அவனுக்கு. அமைதி மாளிகைக்குள்ளே அழுதழுது தன் கதையைக் கூற விரும்புகிறான்.

வேதனைப் பாம்பால் கொத்தப்பட்ட சேகருக்கும் அப்படித்தானிருந்தது. பாலத்து வாசியின் இரும்புக் கரங்கள் அவனது தோளிலே துவண்டன. சேகரின் சிவந்த கண்கள் இரண்டு சொட்டுக் கண்ணீரை மழைத் துளிகளோடு கலந்து வைத்தன. ஈரத்திலும், சகதியிலும் கால் பதிந்து பதிந்து கனத்துப் போயிருந்தது. ......கூடவே இதய பாரம் வேறு! இந்த நிலையிலே தள்ளாடித் தள்ளாடி தான் தங்கிய விடுதிக்கு வந்து சேர்ந்தான் சேகர். சேகரிடமிருந்த அறைச் சாவியை வாங்கி பாலத்து வாசிதான் கதவைத் திறந்தான்.

உள்ளே புகுந்த சேகர் சுவற்றில் சாய்ந்து கொண்டே மின் விளக்கின் பொத்தானை அழுத்தினான். ஒளி இல்லை. மின்னல் அதிர்ச்சியிலே மின்சார ஓட்டமே நின்றுவிட்டது. இரண்டு மூன்று முறை பொத்தானை அழுத்திய பின்னர்தான் சேகருக்குப் புரிந்தது. சோர்ந்து நகர்ந்து சென்று படுக்கையைத் தட்டிவிட்டு, உடலோடு ஒட்டிக் கொண்டிருந்த ஈரச் சட்டையைக் கூட எடுக்காமல் படுத்துக் கொண்டான். பாலத்து வாசியும் ஒரு மூலையில் வழக்கம் போல சிகரெட்டை ஊதித் தள்ளிக் கொண்டே சாய்ந்துகொண்டான்.

ஒளி சிந்தாத இருட்டறை சேகருக்கு மிகமிகப் பிடித்திருந்தது. வாழ்வே இருண்டுவிட்டது. இனி இந்த அறையிலே மட்டும் ஒளி சிந்தினால் யாருக்கு பலன் என்று நினைத்தானோ என்னவோ?...... ஆனால் இருட்டறையையும் மங்கிய இரவின் அமைதியையும் பார்க்கிறபோது கொஞ்சமாவது திருப்திப் படுத்திக் கொண்டான். அந்த அற்ப திருப்தியைக் கூட நீடிக்கவிடவில்லை பாலத்து வாசி. சுவரோடு சாய்ந்து படுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தான்.

'நான் பார்த்தவரை இந்தப் பெண்களே இப்படித்தான் சேகர் ஏன் என் கதைதான் உனக்குத் தெரியுமே! நீ இப்போது என்ன வேதனைப் படுகிறாயோ இதைப் போலத்தான் நானும் என் காதல் ...சூழ்ச்சிக் காதலியால் வாடிய போது திகைத்தேன் தேம்பினேன். இந்த நேரத்தில் ஆறுதல் தர உனக்கு, நானாவது இருக்கிறேன். என் இதயம் வெடித்த நேரத்திலே...சலசலத்து ஓடிய காவேரியாறுதான் எனக்குத் துணை. ஆற்றோரத்திலே அழுது புலம்பினேன். மணல் குவியலிலே புரண்டு வேதனையைச் சொல்லிச் சொல்லி சோர்ந்து போனேன். தாரகைகளிடம் கெஞ்சிக் கதறினேன். என் மாஜி காதலியின் முடிவு சரிதானா யென்று விளக்கங் கேட்டுத் திரிந்தேன். சரியாகச் சொல்லப் போனால் ஒரு முழு பைத்தியம் போல உலவினேன்'

'உன் கதையின் தன்மையே வேறு! காதலித்தாள் ஒருவள் சூழ்நிலையைக் காரணங் காட்டி காலப்போக்கிலே வேறு ஒருவனைக் கைப்பிடித்துக் கொண்டாள் உன் காதலி சூழ்ச்சிக்காரியாகி விட்டாளே என்ற ஏக்கம் உன் நெஞ்சை எரிமலையாக்கி விட்டது. அவளுக்கோ நெஞ்சிலே படமான சுந்தரனை மணாளனாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், எப்படியோ வாழ்வு வண்டி ஓட திருமணச் சக்கரம் புத்தம் புதியதாக அமைந்துவிட்டதே என்றபூரிப்பு. இதிலே உனது ஏக்கம் மட்டுந்தான் மிஞ்சிக் கிடக்கிறது. ஆனால் என்நிலைமை அப்படியல்ல எனக்கு நல்லவளாக காட்சி தருபவள்—வாழ்வுக்கு நாயகியாக வந்து நிற்பவள், பிறரால் ஆமாம் உம் போன்றவர்களால் 'விபசாரி' என்ற பட்டம் சூட்டப்பட்டவளாகிறாள். காலத்தின் சவுக்கடி இரண்டு பக்கமும் விழுகிறது. நீ கூறியதெல்லாம் உண்மையானால் ஊர்க் கெடுப்பவள்தானா என் உள்ளத்து ராணி. கைக்குட்டைக் கதையைக் கூறினாயே அது என் இருதய ஓட்டத்தையே நிறுத்தி வைத்துவிடும் போல யிருக்கிறது. ரோம் நாட்டிலே ஒரு சிங்காரி இருந்தாளாம். அவளோ அழகுத் தேவதை. யார் தன் மனதுக்குகந்தவனோ அவனுக்கு இரவிலே தன் மஞ்சத்திலே இடந் தருவாளாம். இரவு கசங்கி காலை மலர்ந்த போது அவளின் அன்புக்கு—அழியாத நினைவுக்கு முத்திரையாக அந்த போகப் பூனை ஆணழகனின் செவ்விதழை பலங்கொண்டமட்டும் ரத்தங் கசிய கடித்துவிடுவாளாம். அந்த ரத்த முத்தத்தின் வடு......காலத்தால் அழித்துவிட முடியாததாகிவிடும் இப்படி வரிசை வரிசையாக அந்த வனிதாமணியிடம் வடு பெற்றோர் ஏராளம் மிக ஏராளம். ரத்த முத்தத்தின் கதை போலத்தானிருக்கிறது...நீ எடுத்துக் காட்டிய வனஜாவின் வாழ்வு. ரோமாபுரிச் சிங்காரியோ 'வடு' தந்தாள். இவளோ வழக்கமாகத் தருகிறாள் நீலநிறக் கைக்குட்டை தேடி வரும் வாடிக்கைக்காரர்களுக்கு''

'சேகர் கைக்குட்டையை காரணமாக வைத்து மட்டும் இதைக் கூறவில்லை. ஆயிரம் ஆதாரங்களுண்டு. அந்த நாசகாரியின் நாட்டியத்தை நாளையே நேரில் காட்டுகிறேன். வந்துபார். பிறகாவது என்னைப்பற்றி இதயத்தில் கொண்டிருக்கிற கெட்ட எண்ணத்தை மாற்றிவிட்டு அவளைப் பற்றி நினைத்திருக்கும் நல்ல நினைப்பையும் திருத்திக்கொள்'

'ஆமாம் அவள் பற்றிய ஆபாச நிலையை நேரிலே பார்த்தால் தான் நீ கூறுவதெல்லாம் முற்றிலும் சரியானதென்ற முடிவுக்கு வரத் தோதுவாகும். இல்லாத வரை இதயக்குழப்பம்தான். ஒரு மிகப்பெரிய தீர்மானிக்கப்பட்ட திட்டத்தை மாற்றுவதென்றால் பலமிக்க ஆதாரந்தான் முக்கிய தேவை. என் பிரச்சினை 'மான வாழ்வு' ப் பிரச்சினை. எனவே தான் இது மாதிரியான நிலைமைகளில் என் இதயக் கருத்துத் தான் முடிவான தீர்ப்பாகும். ஆகவே...........!'

'நான் தெளிவாக்குகிறேன். அதுவும் நாளையே...! அழைத்துச் செல்லும் இடத்துக்கு என்னோடு வந்துபார் சேகர்: உன் இதயத்திலே கோயிலெடுத்திருப்பவள் எவ்வளவு கேடு கெட்டவள் என்பதைப் புரிவாய். குற்றாலத்துக்கு நீ புதிது. ஆனால் நான் பழையவன். ஆண்டுக் கணக்கிலே குறிப்போடு ஆதாரந்தர முடியும் என்னால். இப்போது அமைதியாகத் தூங்கு சேகர். நாளை காட்டுகிறேன். நீ விரும்பாத—காணக் கூடாத அதிர்ச்சிதரும் காட்சியைக் காட்டுகிறேன்.

...பாலத்துவாசி சுவரைவிட்டு இறங்கி திரும்பிப் படுத்துக் கொண்டு ஏதோ பலமாக திட்டமிட்டுக்கொண்டிருந்தான். நெருப்பான நெஞ்சோடு தத்தளித்துக் கொண்டிருந்தான் சேகர். வாழ்வு வேதனை வளருகிறதே......தொல்லைக்கயிறு இன்னும் இறுகுகிறதே யென்று பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு அனுதாபங் காட்டுவது போல கோட்டான்கள் அலறிக் கொண்டிருந்தன!

(முடியவில்லை !)

SANKARAN PROGRESSIVE TUTORIALS TIRUCHI

S.P.T.

SANKARAN PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P. O., TIRUCHIRAPALLI

RE-OPENS. 10TH JUNE 1955.
S. S. L. C., INTER, B.A., ETC.
(All Parts & Groups)
The Greatest Living Poet
BARATHI DASAN
will teach you Tamil !

Mrs. JUDITH LOUIS B.A. (Hons) — Vice Principal
N. J. DEVADAS, M.A — Principal

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண் சங்கு
சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்

தயாரிப்பவர்:
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம்ரோடு
தஞ்சாவூர்

புதுமை எங்கே?

“திருக்குறளிலே புதுமைக் கருத்துக்கள் இல்லை” என்றுரைத்தார் என் ‘நண்பர்’! அவ்விதம் கூறிய நண்பர் படித்தவர். பட்டம் பெற்றவர். சொல்வன்மை சிறம்பியவர், ஏறக்குறைய ஒரு மக்கள் தலைவர். அவர் வீசினார் இந்த அரிய ஆராய்ச்சிக் கருத்தை! அம்பலத்திலே அன்று, அறையிலேதான் கூறினார்!

‘திருக்குறளிலே இல்லாத கருத்து எங்கும் இல்லை’ என்று கூறுவோர் மீது கொண்ட வெறுப்பால் துவ்விழுமிய கருத்தை நண்பர் விண்டனரோ என்னவோ யானறியேன்! தெள்ளிய கருத்துக்களை ஒள்ளிய முறையில் வள்ளுவர் குறைவின்றி அள்ளித் தெளித்துள்ளார் என்பதை யாரும் மறுக்கமாட்டார். உலகிலேயே மிகுதியான உண்மைகளை உணர்த்தி நிற்கும் தனியான ஒருநூல் எதுவென்று தேடிப் பார்த்தால் திருக்குறளே பரிசு பெறும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இது பலமொழி நூல்களையும் பலகாலும் பயின்ற பெரியோர் தரும் செய்தி. வள்ளுவப் பெருந்தகையை நாம் உலகினுக்கே ஈந்தோம் என்பது வெற்றுரையன்று, பொருள் பொதிந்த பொன்னுரையாகும்.

திருவள்ளுவர் நேற்றோ அதற்கு முந்திய நாளோ வாழ்ந்தவர் அன்று! எனினும் அவர் கூறிய உண்மைகளும் அவற்றில் மலிந்துள்ள அழகுகளும் இன்றளவும் மாறாமல் மின்னிக் கொண்டிருக்கின்றன. இந்நானிலம் நீருள் அமிழ்ந்து போகும் காலம் ஒன்று உண்டென்றால் அந்தக் காலம் வரை வள்ளுவர் வழங்கிய வாய்மைகள் சிறிதும் வழுவா. இது ஒன்றே வள்ளுவரின் சிறப்பிற்கும் போதிய சான்றாகும், நிற்க.

புதுமையின் பொருளென்ன? அது என் நண்பருக்கு விளங்கவில்லை என்றே எண்ணுகிறேன். பழைய கருத்தை இன்று புதிதாகக் கண்டு பிடித்து விட்டதுபோல்கரைவது புதுமையாகாது. வள்ளுவர் அன்று கூறிய கருத்துக்கள் எல்லோரும் வியக்கத் தக்க முறையில் இன்றும் பொருந்துகின்றனவெனின் இன்றைய புதுமை அன்றே வள்ளுவரிடம் புகலடைந்து விட்டது எனத் தயங்காது கூறலாமல்லவா! வள்ளுவருக்குத் தெரியாத புதிய கருத்துக்களை இன்று நாமோ அன்று வேற்று நாட்டாரோ கண்டுபிடித்து விட்டார்கள் என்று வைத்துக் கொண்டாலும் அதனால் வள்ளுவருக்கு வரும் இழுக்கொன்றுமில்லை. அவர் காலத்தில் வள்ளுவர் ஒரு அறிவரசராக விளங்கினார். இக்காலத்தில் வள்ளுவரின் புலமையை வெல்லக்கூடிய ஓர் புதிய ஞாயிறு தோன்றினால் வள்ளுவரே மகிழ்வார்! ஆனால் அத்திறல்மிகு ஒரு அறிஞர் தோன்ற மறுக்கின்றாரே, நாமென் செய்வது! என் நண்பரைப் போன்றாரின் அறிவு நுனிப்புல் மேயும் அறிவாக அமைந்திருக்கிறதே! ஆழிபோன்று ஆழமுடையதாக இல்லையே!

புதுமைக் கருத்துக்கள் என்று நண்பர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்? புதுமைக் காலத்தைத் தோற்றுவித்தவர்தானே புதுமைக் கருத்துக்களை உதிர்த்திருக்கமுடியும்! விஞ்ஞானத்தின் துணையால் இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போர்க் கருவிகளைப் பற்றியெல்லாம் வள்ளுவருக்குத் தெரியாதே என்ற அளவுக்கு நண்பர் கேள்விகளைத் தொடுக்கமாட்டார் என்றே நம்புகிறேன். நாம் காணும் வானூர்தியையும், காணப்போகும் அணுகுண்டையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் வள்ளுவர் காணவில்லையே என்று யாரேனும் கேட்டால் கேட்டோரின் அறியாமை கண்டு உலகம் கைகொட்டிச் சிரிக்கும்!

வள்ளுவர் மிகக் குறுகிய அடிகளிலே தன்கருத்துக்களைப் பொறித்தார். எனவே ஒவ்வொரு குறளையும் நுணுகி நுணுகி ஆராய்ந்தால்தான் வள்ளுவரின் முழுக் கருத்தை உணர முடியும். இன்று நாம் மிகப் புதிய கருத்தாகக் கொண்டாடும் கருத்து ஒன்று அன்றே வள்ளுவர் வகுத்த குறளில் அணுவளவில் காணக்கிடைக்கும். இன்றைய போக்கில் ஒரு சிறு கருத்தை விரித்துச் சொல்லிப் பெருநூலாக்கிப் பெருமையுடன் அடுக்கிவைத்தல் பெருவழக்காகிவிட்டது. இப்புத்துலகில் வழங்கும் எண்ணற்ற நூல்களில் தனிப்பட்ட ஒரு நூலின் கருத்தையெல்லாம் தனியான ஒரு சொல்லில் அடுக்கிக் காட்ட வல்லவர் வள்ளுவர். எனவே குறளை நன்கு ஆராய்ந்தோர் எழுத்தெணணிப் படியாதோர், முழுகி முழுகி முத்தெடாதோர் குறள்பற்றிக் கருத்துத் தெரிவிக்கப் புகுவது அடங்கா நகைப்பிற்கு இடங்கொடுப்பதாகும்.

இன்றைய புத்தம் புதிய கருத்துக்களின் வித்துக்கள் அன்றே வள்ளுவரால் விதைக்கப்பட்டிருக்கும் அவ்விதைகளைக் கண்டுபிடித்தால் குறளின் உண்மையான பெருமை நனிவிளங்கும், சில குறட்பாக்களில் இன்றைய புதுமைகளைத் தெளிவாகவும் காணலாம். திருக்குறளில் புதுமை காணாதுதவிக்கும் என் நண்பருக்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு தருவோம். மற்றவற்றை அவரே படித்து தெரிந்து கொள்ளட்டும். நண்பர் இதுவரை குறளை ஒருமுறை புரட்டியேனும் பார்த்திருப்பார். அதைவிட பிற நாட்டு நூல்களையும் அவைதரும் கருத்துக்களையும் மிக அருமையாக உணர்ந்திருப்பார்.

லெனின் எல்லோர்க்கும் தெரிந்தவர். மிக அண்மைக் காலத்தில் உலகில் உலவியவர். 1870 ஏப்ரல் முதல் 1924 ஜனவரி வரை உயிர் தாங்கி நின்றவர். மார்க்ஸ் கொண்டிருந்த கொள்கைகளுக்கு விளக்கம் கொடுத்து பொதுவுடைமையை நடைமுறையில் கொணர்ந்த வீரர். சுருங்கக் கூறினால் புத்துலகச் சிற்பிகளில் தலைசிறந்த ஒருவர். அவர் கருத்துக்கள் தடையின்றி புதுமையுடையனவாகும் ‘உனக்கு எதிராக ஐந்து கட்சிகள் இருந்தால், நான்கு கட்சிகளோடு சேர்ந்து கொண்டு ஐந்தாவது கட்சியை ஒழித்துவிடு. பிறகு மூன்று கட்சிகளோடு சேர்ந்து கொண்டு நான்காவதை ஒழித்துவிடு. இம்முறையையே மீண்டும் மீண்டும் கைக்கொண்டு இறுதியில் முழு வெற்றி யடைய நீ தகுதியுடையவனாக இருக்க வேண்டும்’ என்பது லெனின் விளக்கிய ஒரு கருத்தின் சுருக்கமாகும். இதையொத்த ஒரு கருத்தை வள்ளுவர் வெளியிட்டிருந்தால் அவரை நாம் புதுமைபூத்த சோலையினும் உயர் சோலையாக ஏற்றுக் கொள்ளத் தடையுண்டா?

தனக்கோ துணையில்லை; பகைவரோ இருவராய் உள்ளனர். ஆகவே வெற்றி உறுதியில்லை. இந்நிலையில் ஒருவன் செய்யத்தக்கது எது? இருவரில் ஒருவனை அணைத்துக் கொண்டு மற்றவனை வீழச்செய்தல், இதுதான் வள்ளுவர் காட்டும் வழி. சேர்த்துக் கொள்ளும் ஒருவனை ‘இனிய’ துணையாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று வழக்கமான நயத்துடன் வள்ளுவர் வரைகின்றார். லெனின் ஐந்து பகைவரிலிருந்து தொடங்கினார். வள்ளுவர் இரண்டிலிருந்து தொடங்கியுள்ளார். இவ்வளவுதான் வேற்றுமை. வள்ளுவரும் ஐந்து பகைவரிலிருந்து தொடங்கியிருக்கலாம் ஆனால் அவர்தான் குறளாசிரியர் ஆயிற்றே! சொற்செட்டு உடையவர் அல்லவா!

லெனின் திருக்குறள் படித்திருந்தால்! அவருக்கு முன் பல்லாண்டுகட்கு முன்னரே பழுத்திருந்த கனியை அறிந்திருந்தால்! ‘இந்தஎண்ணுள்ள குறளை எடுத்துப்படி’ என்று தன் தோழர்களிடம் எளிதாகக் கூறியிருக்கலாம். புதுமை விரும்பும் என் நண்பர் குறளை அமர்ந்து அமைதியாக கூர்ந்து படித்தால் போதுமே!

மையிருள் சூழ்ந்த இரவினிலே கலங்கரை விளக்கம் தரும் கதிர்மிகு ஒளியைப் பாரீர்!

“தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்க (அ)வற்றின் ஒன்று”

கோ. முத்து பி.ஏ.



கங்காணி மகள்

எழுதியவர்: டயெம்பி

கங்காணி மகள் என்னும் இந்நூல் கதையமைப்பில் எழுதப்பட்டுள்ளது. நூல் ஆசிரியர் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையையும், அவர்கள் சுரண்டுபவர்களின் சூழ்ச்சிக்கு சுலபத்தில் இரையாவதையும் சிறந்த நடையில் தீட்டியுள்ளார். விறுவிறுப்பான நடையோடு சீர்திருத்தக் கருத்துக்களையும் சேர்த்துத் தருகிறார் இந்நூலாசிரியர் டயெம்பி.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு உயர்வதற்கான பல நல்ல கருத்துக்கள் இக்கதையில் காணக்கிடக்கின்றன. விலை ரூபாய் ஒன்று.

கிடைக்குமிடம்:-

நல்வழிப் பதிப்பகம்
22. டயஸ்பிளேஸ், கொழும்பு-12

நண்பன்

வார இதழ் விலை சதம் 10, 6 பக்கங்கள்

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸின் கொள்கைகளை ஆதரித்து பிரதி வாரம் சனி தோறும் இலங்கையிலிருந்து வெளிவருகிறது.

ஜனநாயகம்

மாதமிருமுறை, 12 பக்கங்கள். விலை 15 சதம்

இலங்கை காங்கிரஸ் மாநாட்டு மலராக 13—5—55-ம் தேதி இதழ் வெளிவந்துள்ளது. இலங்கையிலிருந்து வெளிவரும் இவ்விதழ் ஜனநாயக காங்கிரசின் கொள்கைகளை தாங்கி வருகிறது.



விரைவில் எதிர்பாருங்கள்!
மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றம் அளிக்கும்
“அத்தான்”
?

ஏஜெண்டு தோழர்களுக்கு

வணக்கம். சென்ற வாரம் மே முடிய பட்டியல் அனுப்பப் பட்டுள்ளது. உடன் நிலுவைத் தொகையை அனுப்பிவிட வேண்டுகிறோம். முன்பணத்தைவிட நிலுவை அதிகரித்துவிட்ட தோழர்களுக்கு தொடர்ந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்

திராவிடன்

சென்னை : 3—6—55 : வெள்ளி

"இந்துவின் ஆவேசம்?"

தீண்டாமை குறித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையொட்டி சென்னை சர்க்கார் அரிஜனநலப் பாதுகாப்பு இலாகாவினர் படம்போட்டு வெளியிட்டுள்ள சுவரொட்டிகளை பொது மக்கள் கண்டிருப்பர்.

இந்தப்படம் சிலருக்கு உண்மையிலேயே வயிற்றெரிச்சலை உண்டுபண்ணி யிருக்கிறது

இது குறித்து ஆங்கில தினசரியான இந்து பத்திரிகையும் தனது வயிற்றெரிச்சலை துணைத்தலையங்கம் மூலம் கொட்டியிருக்கிறது.

ஏற்கனவே இனத்தின் சார்பாக வளர்ந்து வரும் ஒரு இயக்கம் மேலும் வளர இந்த சுவரொட்டி வாய்ப்பாக இருக்கிறதே என்று சுயஜாதி அபிமானத்தின் காரணமாக தனக்கு ஒவ்வாத கருத்தை மேலெழுந்தவாரியாக தெரிவித்திருக்கிறது.

அவர்களுடைய கருத்தை—அவர்களுடைய இதழில் எழுதியிருப்பது குறித்து நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. இருப்பினும் இதுபோலவே எல்லா இனத்திற்கும் அவ்வப்போது ஏற்படுகின்ற இன்னல்கள் குறித்து 'இந்து' தனது கருத்தைத் தெரிவித்திருந்தால் இந்த நேரத்திலும் நாம் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை.

ஆனால், இதற்கு முன் ஜாதிக் கொடுமை பல விதங்களில் தலைவிரித்தாடிய போதும்—அதனால் பலர் பாதிக்கப்பட்ட போதும், தாழ்வுற்றபோதும் வாய்மூடி மௌனிகளாக இருந்த ஏடுகள் இப்போது—வைதீகபுரியினரின் மானம் பறிபோகிறதே—சில முற்போக்கு இயக்கம் வளர வழிவகுத்து கொடுப்பதுபோல இருக்கிறதே சர்க்காரின் செயல் என்றெல்லாம் ஒப்பாரி ராகம் பாட ஆரம்பித்திருக்கின்றன. பரிதாபம்—பரிதாபம்.

கோபம் வந்திருக்கிறது. என்ன செய்வது. காலம் மாறிவிட்டது. கதறிப் பயன் என்ன? காலத்திற்கேற்ப தங்கள் கருத்தை மாற்றிக் கொள்வதுதானே நாகரீகப்பண்பு.

இன்னும் எவ்வளவு காலத்திற்கு ஜாதி ஆணவத்தின் பெயரால் காலம் கழிக்க எண்ணுவது. காந்தியார் காலத்திலிருந்தே தீண்டாமை ஒழிப்புக்கான முயற்சிகளில் பலர் ஈடுபட்டிருந்தபோது—கவனியாதிருந்த ஏடு படம் போட்டு காண்பித்த பிறகு அறிய—உணர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால் மிகையாது.

இதுபோன்றுதான் திராவிட இயக்கக் கொள்கைகள் ஒவ்வொன்றும் முதலிலே கடுமையான எதிர்ப்புக்கு ஆளாகிறதெனினும் ஆனால் கடைசியில் யார் யார் எதிர்க்கின்றனரோ அவர்களே தீவிரமாக பரப்புகின்றனர்.

சுவரொட்டி படத்தில்—குறிப்பாக ஆரியர் போன்ற படம் போட்டு—பிரச்சாரம் செய்திருப்பதனாலேயே ஆத்திரப்பட்டிருக்கிறது இந்து ஏடு!

படத்திற்கே இவ்வளவு கோபம் வந்திருக்கிறது என்றால் இத்தனை காலமாக—மேல்சாதிக்காரர்கள் என்று கூறிக் கொள்ளும் ஆரியர்கள் செய்துவந்த சூழ்ச்சிகளும்—சூத்திரர்கள் என்று இழித்தும் பழித்தும் நடைமுறையிலேயே உண்டாக்கி வந்தனரே அப்பொழுதெல்லாம் இந்த ஏடு என்ன செய்து கொண்டிருந்தது என்பது தெரியவில்லை. ஜாதி அபிமானத்தின் காரணமாக—மகிழ்ச்சிக் கொண்டிருந்ததோ என்று எண்ணவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்துவுக்கும்—அதைச் சார்ந்தோருக்கும் இந்நிலை கஷ்டமாக இருந்தால் நாம் சிறிது அனுதாபப்படலாம். ஆனால் இதுவரை பலபுராணங்களிலும், கடவுள் காதைகளிலும், ஏன் — இன்னும் சொல்லப் போனால் விஞ்ஞான ரீதியில் எடுக்கப்படும் சினிமாப் படங்களிலேயும் திராவிடர்களை சூத்திரர்கள் என்றும் தங்களுக்கு கீழான வர்கள் என்றும் எழுதிவந்திருக்கின்றனர்,

அதுபோன்ற நேரங்களிலும் இந்து போன்றவை நடந்துவந்த முறை—அதனை ஆதரிப்பது போலவே தோன்றியது.

இன்றைய தினத்தில் டெல்லி பாராளுமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றவும், அதனைபொட்டி சென்னை சர்க்கார் அரிஜன நல பாதுகாப்பு இலாகா சுவரொட்டிகள் அச்சடித்து தைரியமாக பிரச்சாரம்செய்தும் வருகின்றன என்றால்—திராவிட இயக்கத்தின் 30 ஆண்டு கால பணியின் மகத்தான வெற்றிகளில் ஒன்று எனக் கூறின் மிகையாகாது.

இதே நேரத்தில் இன்னும் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். தீண்டாமை ஒழிப்புக்குப் படம் போட்டு ஒட்டிவிட்டால் மட்டும் போதாது—மேலும் அப்பிரச்சாரம் வலுவடைந்து நடைமுறையில் அமுலாக்க சென்னை சர்க்கார் மிக்க கவனம் செலுத்த வேண்டுமென்பதுடன் ஒருசில ஆரியஏடுகள் எதிர்க்கின்றன என்பதனாலேயே பயந்து—முயற்சியை விட்டு விடக் கூடாது என்பதையும்—இப்போது நடைபெற்று வரும் சர்க்காரின் போக்கினை கவனிக்குமிடத்து தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

இனியாவது ஜாதிவெறி காரணமாக இதுபோன்ற ஆவேசகூச்சல்போடுவது அறிவுடைமை ஆகாது என்பதை இந்துபோன்ற ஏடுகள் உணர வேண்டுகிறோம்.

ஏஜெண்டு தோழர்களுக்கும் சந்தா நேயர்களுக்கும் முக்கிய அறிவிப்பு

தபால் மூலமாக அனுப்பப்படும் திராவிடன் இதழ் கடந்த நாலைந்து வாரங்களாக மிகவும் தாமதித்து வருவதாகவும் இதுகுறித்த விவரம் என்னவென்றும் கேட்டு பல ஏஜெண்டுத் தோழர்கள், சந்தா நேயர்களிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளன. பிரதி வாரமும் (அஞ்சல்நிலைய உத்திரவுப்படி) வியாழன் தோறும் இவ்விடமிருந்து தவறாது அனுப்பப்பட்டு வருகிறது. இதனை சென்னை வால்டாக்ஸ்ரோட் அஞ்சல் நிலைய அதிகாரிகளே அறிவர். எனினும் தாமதம் ஆவது குறித்து வியப்பாயிருக்கிறது. எனவே ஏஜெண்டு தோழர்களின் கடிதங்களை வைத்து சென்னை அஞ்சல் நிலைய அதிகாரிகளுக்கு அனுப்பி யிருக்கிறோம். விரைவில் ஆவன செய்யப்பட்டு வழக்கம்போல தாமதமின்றி கிடைக்குமென்று நம்புகிறோம். தோழர்கள் இவ்விவரம் அறிய வேண்டுகிறோம்

நிர்வாகி, 'திராவிடன்'

தோழர் என். எம். ஜோஷி

இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தை தோற்றுவித்து வளர்த்த முக்கிய தலைவர்களில் ஒருவரான தோழர் என். எம். ஜோஷி அவர்கள் இயற்கையெய்திய செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம். தொழிற் சங்கப் பணியில் அரசியல் கட்சி வேறுபாடுகள் நுழையக் கூடாது என்பதில் அழுத்தந்திருத்தமான எண்ணமும் செயலும் கொண்ட அவரின் பிரிவானது அரசியலின் பேரால் துண்டு போடப்பட்டு சிதைவுற்றிருக்கும் இன்றைய தொழிலாளர்களுக்கு பெரும் நட்டமாகும்

எனினும் அத்தலைவர் கடந்த 35 ஆண்டுகளாக ஆற்றியுள்ள அருஞ்சேவையை இனியாவது தொழிற் சங்கத் துறையில் பணியாற்றுபவர்களும் தொழிலாளர் தோழர்களும் வழிகாட்டியாகக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

தோழர் என். எம், ஜோஷி அவர்களுக்கு நமது இறுதி வணக்கத்தையும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நடக்க இருப்பவை

சென்னை 3-வது வட்ட தி. மு. க.

4—6—55 சனி மாலை 6-மணிக்கு வண்ணை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) தோழர். த. சேதுராசன் தலைமையில் மாபெரும் கூட்டம் நடைபெறும். தோழர்கள். சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன், விருதை ந. ராமசாமி ஆகியோர் பேசுவர். நாகை இரா. சண்முகம், இயக்கப் பாடல்கள் பாடுவார்.

குறிப்பு: 24-5-55 அன்று கோகலே மண்டபத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சு இக் கூட்டதில் ஒலிபரப்பப்படும்.

தென்காசி

தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக 28-ம் ஆண்டு நிறைவு திறக்குறள் விழா ஜுன் மாதம் 4, 5, 6 ஆகிய தேதிகளில் நடைபெறும். மூன்று நாட்களிலும் பல தமிழறிஞர்கள் பங்கு கொள்கின்றனர். நாடகம், இன்னிசை முதலான நிகழ்ச்சிகளும் உண்டு.

கூவசம்பட்டு தி. மு. க.

7—6—55 செவ்வாய் மாலை 6-மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் ஜி. சுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், போளூர் சுப்ரமணியம், முல்லை சத்தி ஆகியோர் பேசுவர்.

கே வி குப்பம் (வ-ஆ) தி. மு. க.

5—6—55 மாலை தோழர் கே. ஜி. ராசன் தலைமையில் தி. மு. க. பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் வே. அ. இளஞ்செழியன், மணி எழிலன் ஆகியோர் பேசுவர்.

மதுரை தி. மு. க.

இளங்கோ மன்றத்தின் மூன்றாம் ஆண்டுவிழா மதுரை பாண்டிய வேளாளர் தெருவில் நடைபெறும். தோழர்கள் க. அறிவழகன், எஸ். முத்து, பி. கே. சேதுராமன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் கலந்து கொள்வர்.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகம்

கோவை திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழக அமைப்புக் குழுக் கூட்டம் 5-6-55 அன்று காலை 10-மணிக்கு கோவை இராமநாதபுரம் தி. மு. கழக கட்டிடத்தில் நடைபெறும். அவ்வமயம் வரவு செலவு. அடுத்த செயற்குழு கூடுதல், தொழிற்சங்க திறப்புவிழா ஆகிய இவைகுறித்து முடிவுகள் எடுக்கப்படும். இக்கூட்டத்தில் கோவை நகர தி. மு. க, செயலாளர் எஸ். எ. ராசமாணிக்கம் அவர்களும் கலந்து கொள்வார். தோழர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு அமைப்பாளர் இரா. சுந்தரம் அறிவிக்கிறார்.

தங்கையன் - சின்னம்மாள்

பட்டுக்கோட்டை நரியங்காட்டில் கே. அடைக்கலம் தலைமையில் தங்கையன்—சின்னம்மாள் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் ஆர். வடிவேல், சோவி. இளந்திரையன், எ. எம். ஜெயசந்திரன் முதலியோர் திருந்திய திருமணம் என்பதுபற்றி பேசினர். இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் 2 வரப்பெற்றோம். நன்றி—நிர்வாகி

விசித்திர தீர்மானம்

மூலம் : போத்தன் ஜோசப் • தமிழாக்கம் : ஏ. டி. பிரான்சிஸ்

[முன்னுரை: தேசிய மொழி என்ற போர்வையில் வடவரின் மொழி திணிக்கப்படுவது திராவிட மொழிகளின் சுதந்திரத்தை மறைமுகமாகப் பறிப்பதாகும் என்று கூறுபவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல என்பதை உணர்த்துகிருர் பெரும் எழுத்தாளர் போத்தன் ஜோசப். என்ருே ஒரு நாள் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தவர் என்ற பாணியிலே அல்ல: பன்முறை நம்மைவிட துணிகரமாக ஆணித்தரமாக ஆனுல் மறுக்க முடியாத சான்றுகளுடன் இந்தி எதேச்சாதிகாரத்தை கண்டிக்கும் திராவிடர் அவர். மொழிவழி மலையாளி; கன்னட நாட்டில் 'டெக்கான் ஹெரால்டு' என்ற ஆங்கிலச் செய்தித்தாள் வாயிலாக எழுப்புகிருர் இந்தி எதிர்ப்பு முழக்கம்.]

*

ஆங்கிலத்தை அதன் இடத்திலிருந்து விரட்டியடித்துவிட்டு அந்த இடத்திற்கு இந்தியைக் கொண்டு வருவதைப்பற்றி மத்திய அரசாங்க அமைச்சர் திரு. கோவிந்தபந்த் பேசியபோது ஏப்ரல் 5-ந் தேதி (1954) காங்கிரஸ் நிர்வாகக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் கீழ் சரணடைந்தார். இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டு தானுகிறது. இதற்குள் இத்தீர்மானத்தின் அவசியத்தையும் மேன்மையையும் மக்கள் அறிந்து கொண்டார்கள் என்று எவரும் கூறமுடியாது. மக்களின் உள்ளங்களில் ஆழமாய்ப் பதிகின்ற அளவுக்கு அந்தத் தீர்மானம் நடைமுறையில் அமுல் நடத்தப்படவில்லை; அதையறிய மக்களுக்கு வாய்ப்புகளும் ஏற்படவில்லை. அதனுல் இந்த தீர்மானம் மக்களுடைய எண்ணங்களைக் கவர்ந்து விட்டதென்ருே, அவர்களின் சிந்தனையில் ஊறிவிட்டதென்ருே காரணங்காட்டி அத்தீர்மானத்தை மாற்றுவது ஏற்கனவே மக்களின் இதயத்தில் பதிந்துவிட்ட கருத்திற்கு ஊறு செய்வதாகும் என்று கூறமுடியாது. இத்தீர்மானம் நடைமுறையில் இதுகாறும் அனுசரிக்கப்பட்ட போதிலும் யாதொரு பெரிய மாறுதலும் உண்டாக்கவில்லை என்பதே சான்ருகும். எனவே இந்த விசித்திரத் தீர்மானத்தை மாற்றுவதால் நிலைமை மோசமாகிவிடும் என்று சொல்லுகிற அளவுக்கு இத்தீர்மானம் எதையும் சாதித்துவிடவில்லை. காங்கிரசில் நிறைவேற்றப்படும் எத்தனையோ தீர்மானங்களைப் பற்றி பெரும்பாலோர் அக்கரை கொள்வதே கிடையாது. முக்கியமாகக் கல்வி, பொருளாதாரம் ஆகிய சிறந்ததுறைகளில் ஆராய வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படும்போது, காங்கிரஸ் கமிட்டித் தீர்மானத்தை மக்கள் சிரத்தையுடன் கவனிப்பதே கிடையாது.

மக்களை கட்டுப்படுத்துவதற்காக காங்கிரஸ் கையாளும் சீர்திருத்தங்களை மக்கள் வரவேற்ற போதிலும், விஞ்ஞானம், கல்வி, கலாச்சாரம் ஆகிய துறைகளில் அறிஞர்கள், அனுபவசாலிகள், பல்கலைக் கழகப் படிப்பாளிகள் கல்வி நிபுணர்கள் ஆகியோரின் அறிவுரைகளையே காங்கிரஸ் கமிட்டித் தீர்மானங்களைக் காட்டிலும் சிறந்ததாகக் கருதி மக்கள் வரவேற்பர். உண்மையில், இத்தகைய பிரச்னைகளில் காங்கிரஸ் கமிட்டித் தீர்மானங்களுக்கு அரசாங்கம் பலியாகித்தான தீர வேண்டுமென்று கருதுவது தவருகும், காங்கிரஸ் ஆளும் கட்சியானுலுங் கூட. கொள்கை வைராக்கியம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு விசாரணை, ஆராய்ச்சி, சீர்திருத்தம் முதலியவற்றை கவனிக்காமலுங் கூட காங்கிரஸ் கட்சியில் தீர்மானங்கள் அதைக் கொண்டுவருபவர்களின் செல்வாக்கையொட்டியே நிறைவேற்றப்படும். எனவே அத்தீர்மானங்களை நேர்மையானவை என்று கருதிக் கொண்டு அரசாங்கம் அவற்றிற்கேற்ப செயலாற்றுவது இழுக்கு. அரசாங்கம்—காங்கிரஸ் கமிட்டி—இவை இரண்டும் வெவ்வேறு ஸ்தாபனங்கள் என்ற உண்மையை ஆட்சி செலுத்துவோர் மறத்தல் கூடாது. கட்சி நிர்வாகக் குழு மொழியைப்பற்றி ஏற்படுத்தும் துணிகர தீர்மானங்கட்கு மதிப்பளித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தம் எதுவுமில்லை. சிறப்பாக இந்தி மொழியை தேசிய மொழியாக மாற்றுவதைக் குறித்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், இந்திய அரசியல் இலாக்காக்களில் இராணுவத்திலும் கையாளக் கூடியதுதானு என்ற ஆராய்ச்சிகள் செய்யப்பட்டதால் காணப்பட்ட முடிந்த முடிவுகள் என்று உறுதியாகக் கருதமுடியாது.

அரசியல் இலாகாக்களுக்கு உத்தியோகஸ்தர்கள் பரிட்சைகள் நடத்துவதைப்பற்றி காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் செய்திருந்த போதிலும், அத்தீர்மானம் எவ்வளவு பயனற்றது என்பதை அது அமுல் நடத்தப்படுகின்ற இச்சமயத்தில் ஏற்படும் விபரீத விளைவுகளாலும் கொந்தளிப்புகளாலும் உணரலாம். பதினைந்து ஆண்டுகளுக்குள் ஆங்கிலத்தை அகற்றி விட்டு இந்தியையே தேசிய மொழிப் பதவியில் அமர்த்தி விட்டு இராஜாங்கத்தை அம்மொழியிலேயே நடத்துவதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய சர்க்கார் மாகாண ஆட்சிகளுக்கு அறிக்கை விடுத்துள்ளது. இந்நிலை ஏன் ஏற்பட்டது? இந்திய அரசியல் சட்டங்கள் இயற்றப்பட்டபோது அவசரத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் செய்து முடிக்க எவ்வளவுகாலம்தேவைப்படும் என்ற கால அளவு கவனிக்கப்படவில்லை. அதுவும், வலிவற்ற இந்தியை, இந்தி பேசாதோர் பெரும்பான்மையாக உள்ள நாட்டில் வளப்பமிக்க மொழிகளுக்கு எதிரில் புகுத்துவதற்கு எவ்வளவு காலம் தேவையென்று ஆலோசிக்கப்படவில்லை. தவிர, அம்மொழியைப் பரப்புவதற்கு போதுமான ஆசிரியர்கள், புத்தகங்கள் இல்லாதவாறு பிற்பட்டிருந்த இந்தியை திணிக்க காலம் எவ்வளவு தேவை என்று கணித்திருக்க வேண்டும், அதைச் செய்யவில்லை. இத்தகைய பிரச்னைகளுக்கே சட்டமியற்றியவர்கள் இடமளிக்கவில்லை. பத்தாண்டுகளுக்கு முன்னிருந்த அரசியல் தலைவர்கள் வளமற்ற இந்தியை எங்ஙனம் செழிப்புமிக்க மொழிகளுக்கிடையே பரப்ப முடியுமென்று ஊகித்துணரவில்லை. இவற்றைப்பற்றிய நேரடி விவாதங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே சாதுர்யமாக பண்டித பந்த் காங்கிரஸ் கமிட்டித் தீர்மானத்தை தனக்கு பாதுகாப்பாக அமைத்துக் கொண்டு பேசுகிருர்.

பண்பட்டு முதிர்ந்த நிலையிலுள்ள சற்றேறக் குறைய எட்டு மொழிகள் தற்போது சிறப்பாக உலாவி வருவதால் இந்தியை வரவேற்பதில் தயக்கம் ஏற்படுவது மட்டுமின்றி, மாகாண மொழிகளுக்கு தக்கவாறு மதிப்பளிக்குமாறு இந்தி வெறியர்களை வற்புறுத்த வேண்டிய நிலைமை வளர்கிறது. கடந்த பத்தாண்டுகளாகத்தான், அதன் ஆதரவாளர்களால் இந்திக்கு ஆக்கம் தேடப்பட்டு வருகிறது. பால்ய நிலையிலுள்ள இந்தி எனும் மண்மூட்டை மீது மக்கள் தங்கள் தலைகளை முட்டிக் கொள்ள மாட்டார்கள்.

கோவிந்த பந்த் காங்கிரஸ் மேல்சபையின் பகட்டான—சாக சமான தீர்மானத்தை படித்துக் காட்டி, அதை மத்திய அரசாங்கம் கடைபிடிக்கும் என்று அறிவித்து விட்டார். அந்த தீர்மானம் குறிப்பிடும் காலவரையறை பற்றிய கருத்து ஆராய்ச்சிக்கு முரணுனது. ஒருமொழியை ஒருகுறிப்பிட்ட காலத்திற்குள் திணித்து விட முடியுமென கருதுவதே முறையற்றதாகும். அவ்வாறு காலவரையறை குறிப்பிட்டிருப்பதாலேயே அத்தீர்மானம் அமுல் நடத்துவதற்கு சாத்தியப்படாமல் போவதன் மூலம் சீர்குலைந்து போகும், இயற்கையாகவே வேறு எந்த தாக்குதலும் இல்லாவிட்டாலுங்கூட. அத்தீர்மானத்தின் தோல்வி அதன் தன்மையாலேயே உண்டாகிவிடும். மற்றும், ஒரு குறித்த காலத்திற்குள் ஒரு மொழியை புகுத்திட வேண்டும் என்ற செயல் நேர்மையானதல்ல சீரானதுமல்ல.

இந்தியைப் பரப்புவதைப்பற்றி கீழ்க்கண்ட முறைகள் அனுசரிக்கப்படப் போவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளன. முதலில் அரசாங்க உத்தியோகங்களில் ஆங்கிலமும், மாகாண மொழி அல்லது இந்தியுமாக இரண்டில் ஒன்றும் இடம் பெறும். அடுத்த கட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் பரிட்சைகளில் இந்தி மொழியில் தேரவேண்டும். அடுத்தது, இந்தி, மாகாணமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்றில் ஒன்றில் தேறியதோடன்றி இந்தியில் கடினமான பரீட்சையில் தேறியாக வேண்டும். இந்த நிலையில் ஆங்கிலம் தனது மதிப்பை இழந்திடும். இத்தகைய கட்டங்கள் இந்தி திணிப்பின்போது பின்பற்றக் கூடியன என்று காங்கிரஸ் தீர்மானம் கூறுகிறது. இவற்றை மட்டும் கூருமல், இந்திய அரசியல் சட்டத்திற்கு ஏற்ப இந்தியை 15 ஆண்டுகளில் இந்தியா வெங்கும் புகுத்தியாக வேண்டும் என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தனை கட்டங்களையும் குறித்த காலத்திலேயே முடித்திட இயலுமா? அரசாங்க சட்டத்தில் ஒரு நிகழ்ச்சி ஒரு குறித்த காலத்தில் முடியவேண்டுமென்று குறிப்பிட்டு விட்டதால் அந்நிகழ்ச்சி இயற்கையாகவே அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் முடிந்துவிடுமா? ஒரு மாங்காய் ஒரேநாளில் பழுத்துவிட வேண்டுமென்று சட்டமியற்றினுல் அது உண்மையிலேயே அக்காலத்திற்குள் பழுத்திட இயலுமா? அப்படி பழுக்கும் என்று தீர்மானிப்பது ஏளனத்திற்கு இடமளிக்கும். இவ்வாறே அரசியல் சட்டத்தையும், அதனை அடிப்படையாகக் கொண்ட காங்கிரஸ் தீர்மானத்தையும் பரிகாசம் செய்ய வேண்டியுள்ளது. ஒருமலர் காயாகமாறுவதற்கு இயற்கை வகுத்துக் கொண்ட கால அளவு உண்டு. அந்த இயற்கையான கால வரம்பில் ஆறு மாதங்கள் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று சட்டமியற்ற முடியுமா? அதைப் போலவேதான் ஒரு மொழியைப் பரப்புவதும்; அந்த மொழியியற்கையாக பரவக்கூடிய தன்மையைப் பொறுத்தே காலந்தரப்பட வேண்டுமே யல்லாது, குறித்த காலத்திற்குள் புகுத்திட முடியுமென்று எண்ணுவது ஏளனத்திற்குரியதாகும்.

வளமிக்க மொழி ஆட்சிபீடத்திற்கு வருவதில் தென்னவர்களுக்கு ஆட்சேபமில்லை; ஆனுல் வளமற்ற மொழி அரசேற்பதற்கு எதிர்ப்பு உண்டு. காங்கிரஸ் தீர்மானத்தைக் குறிப்பிட்டு பேசியதுமல்லாமல், இந்தி மொழி வளர்ச்சியைப்பற்றி ஆராய குழுவொன்று அமைக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். குழு அமைக்கும் முறை எப்போது தேவை? இக்குழுவின் முடிவுகளைக் கொண்டு தீர்மானங்களை உருவாக்குவதற்கா? அல்லது தற்போது காங்கிரஸ் தீர்மானங்கள் சரியென்ற முடிவுகளை உருவாக்குவதற்கா? குழுவின் முடிவை ஆதாரமாகக் கொண்டுதீர்மானங்களைச் செய்து செயலாற்றுவதே பொதுஅறிவாகும். அப்படிச்செய்யாமல், காங்கிரஸ் நிர்வாகக்குழுத் தீர்மானங்களை எவரும் மறுக்கக் கூடாத வேதாந்த கட்டளைபோல எண்ணி, அரசியல் சட்டத்திற்கு இடமளிக்கும் வகையில் தீர்மானத்தை அமுல் நடத்த தொடங்கியது முறையல்ல. எண்ணித் துணிக கருமம் என்ற முறையை மறந்ததுமல்லாமல் துணிந்த பின் குழுவைஅமைத்து எண்ணுகின்ற முறை முட்டாள்தனமான போக்கு.

•

உழவன் தீட்டும் முடங்கல்.

●

[ஆலைத் தொழிலாளியே அறிஞர் அண்ணு அவர்களிடம் எங்களின் விண்ணப்பத்தைக் கூறு.]

அன்புள்ள சுந்தரம்,

வணக்கம்.

உன் அஞ்சல் அடையப்பெற்றேன். அகமகிழ்வு கொண்டேன்.

நண்பா! நீ உன்னுடைய ஆலையில் அண்மையில் நடைபெற்ற அடையாள வேலைநிறுத்தம் பற்றியும், தொழிலாளர் காட்டிய மாபெரும் ஒற்றுமையைப் பற்றியும் அண்மையில் தோற்றுவிக்கப் பட்டுள்ள 'திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தைப்' பற்றியும், என் இனத்தின் பேரால் ஒரு சங்கம் அமைத்தோம் என்பது பற்றியும், கம்யூனிஸ்டுகளின் தவருன போக்கினையும் மிக நன்ருக விளக்கி இருந்தாய். இதையெல்லாம் கண்ணுற்றநான் மில் தொழிலாளியான உன்னைப் பார்த்து பொருமைப் படுகிறேன். ஏன் தெரியுமா?

இந்த நாட்டின் உயிர்நாடிகளே—உழவர்களாகிய நாங்கள்தான் என்று ஆசியாவின் ஜோதியிலிருந்து ஆச்சாரியார் வரை, நாள்தோறும் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் பறைசாற்றுகின்றனர். ஆனுல் நாங்கள் கண்ட பலன்? வறுமையை அணைப்பதைத் தவிர வளத்தைக் காணமுடியவில்லையே. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்று வள்ளுவர் கூறினுர் அன்று. ஆனுல் இன்றே, நாட்டிலே நாம் காணும் நிலை உழைத்து, உழைத்து ஓடாகிப்போன உழவன் மரக்கிளைகளை தேடுகிருன் உயிரைவிட!

விவசாய சங்கங்கள் தான் பல பாடுபட்டு வருகிறதே இவர்களைப் பற்றிய செய்திகள்தான் செய்தித் தாட்களில் குவிந்தவண்ணம் உள்ளனவே. அப்படியிருக்க இவன் இப்படி தீட்டுகிருனே என்று திகைக்காதே. நீ எண்ணுவது போல் எங்கட்கென்று பல சங்கங்கள் உள்ளன, அவை யாவை என்பதையும் அதனுல் நாங்கள் அடைந்துள்ள நன்மைகளையும் அறிந்தாயானுல் நீ திகைக்க மாட்டாய்.

கம்யூனிஸ்ட்டுதோழர்கள், காங்கிரஸ் கட்சியினர், சோஷலிஸ்டுகள், மற்றும் சில உதிரிகள், இப்படிப் பலரால் சங்கங்கள் நடத்தப்படுகின்றன.

இவர்களை மூன்று அணியாகப் பிரிக்கலாம். ஒரு சாரார் தங்கள் கட்சியின் நலனே பெரிதெனக் கொண்டு எங்களை வாழ்விப்பதாகக் கூறி எத்திப் பிழைப்பவர்கள் — இவர்களின் பித்தலாட்டத்தை ஒழிப்பதாக நிலச்சுவான்களிடம் பேரம் பேசிக்கொண்டு எங்களைப் பழிவாங்குபவர்கள்.

நண்பனே! மூன்ருவது அணியிலே நிற்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். இவர்கள்தாம் எங்களுக்கு ஆபத்தில் உதவும் அண்ணல்கள், ஆனுல் இவர்கள் எங்கட்கென்று ஒரு சங்கம் வைக்காமல் இருக்கிருர்கள். இவர்கள் சங்கம் அமைத்து நடத்திஞல், எங்கள் வாழ்வு வளமடையும் என எங்களில் பலர் எண்ணுகிறேம்.

இவர்களில் கம்யூனிஸ்ட்டுகளைப்பற்றி அதாவது எங்கட்காகவே உழைக்கப் பிறந்தவர்கள் என மாற்ருர் எண்ணிடும் வகையில் வாய்ஜாலம் பேசித்திரியும் இக்கூட்டத்தின் உண்மைசொருபத்தை சற்று விளக்குகிறேன்.

கம்யூனிஸ்ட்டுகள் 1948-ல் இவர்களால் துவக்கப்பட்ட விவசாய சங்கம் வளர்பிறைபோல் வளர்ந்தது. நாங்களும் அணி அணியாகத் திரண்டோம். செங்கொடியின் கீழே அவர்களின் வார்த்தையில் நம்பிக்கை வைத்தோம். அவர்களின் ஆத்திர மூட்டும் பேச்சுக்களில் ஆட்பட்டு எங்களில் பலர் செய்த கொடுஞ்செயல்களை இப்பொழுது நினைக்கவும் என் நெஞ்சு நடுங்குகின்றது. இம்மாதிரி செய்கைகளில் கஷ்டப்பட்ட கம்யூனிஸ்ட்டுகள் உண்டா? தூண்டிவிட்டு மறைந்துவிடுவர் ஆனுல் துன்பப்படுவது நாங்கள்தான். ஏன்? எங்கள் தாய்மார்கள்தான் கற்பழிக்கப்பட்டனர். இது மட்டுமா?

இவர்கள் எங்களை அடிமைகளாக வேறு நடத்தி வருகின்றனர். 10 ஆண்டுகளாக கம்யூனிஸ்ட் விவசாய சங்கம் நாட்டிலே நடமாடியும் சங்கத்தைப் பற்றிய சங்கதிகள் புரிந்த எந்த விவசாயியும் கிடையாது. கேட்போமானுல் மதவாதிகள் பேசுவதுபோல பேசுகிருர்கள். ஏம்பா உனக்கு அதெல்லாம். இதெல்லாம் கட்சி ரகசியம். தெரிந்தால் மிராசுதார்கள் எல்லாம் உஷாராகிவிடுவார்கள். உங்களுக்கு தேவை கூலி ஒரு மரக்கால்தானே அதை வாங்கிக் கொள். என்றுகூறி மிராசுதார்களை காண்பித்து வாய்ப்பூட்டு போட்டுவிடுகின்றனர். இதோடு நின்றதா இவர்கள் கூத்து.

எங்களை கலகத்தில் சிக்கவைத்து விட்டு ஓடிவிடும் இவர்களை மறுபடி காணுவது என்பது அத்தி பூத்தாற் போலத்தான். உழவர்கள் பொருள் கொடுத்தாலும் வழக்கு நடத்தக்கூட இவ்வன்கணுளர்கள் முன்வருவதில்லை. அந்த சமயமெல்லாம் எங்கட்கு உதவ திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் முன்வருகின்றனர்.

மேலும் சாதியை ஒழிப்போம் எனப் பேசும் இச்சர்வதேசக் கண்ணேட்டக் காரர்கள் நடத்தும் தேநீர் விடுதிகளில் கூட, எங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனியிடம்தான் இன்றும்! இன்னும் சொல்லப்போனுல் பல இடங்களில் இவர்கள் சாதி வெறியிலேயே குளிர் காய்கிருர்கள், வெட்கமின்றி ஒப்புக் கொள்கிறேன் நண்பனே! இவ்வளவிற்கும் காரணம் அறியாமைதான். எங்களில் பலர் கையெழுத்துக் கூட போடத் தெரியாதத் தற்குறிகள். நண்பா! நிலமை இப்படியிருக்கும் போது நான் உன்னைப் பார்த்து பொருமைப் படுவதில் தவறென்ன இருக்கிறது.

சுந்தரம், கொஞ்சம் பொறுமையாகப்படி எங்கள் பரிதாப நிலையைப்பற்றி சற்று விளக்கிவிட்டு முடங்கலை முடித்துக் கொள்ளுகிறேன். சிரமம் கொடுப்பதாக எண்ணுதே!

அரசியல் கட்சிகளால்தான் இவ்வளவு தொல்லைப்படுகிறேம் என்றுல் ஆட்சியாளராலாவது ஏதாவது நன்மைஉண்டா? ஆட்சியாளரோ பாலுக்கும்காவல் பூனைக்கும் தோழனுக இருக்கிருர்கள். குன்னியூருக்கும், வடபாதிமங்கலத்துக்கும் குனிந்து கொடுத்து ஏதோகண் துடைப்பது போல சில கமிட்டிகளை அமைத்து செப்படிவித்தைகள் புரிகின்றனர்.

ஏன்! ஆச்சாரியார் கொண்டுவந்த 'தஞ்சைப் பண்ணையார் பாதுகாப்புச் சட்டந்தான்'' உளதே என்று எண்ணுதே! ஏனெனில் இன்று எங்கட்கு மாபெரும் தலைவேதனையை அளிப்பது இந்த சட்டந்தான். ஆளைக்கண்டு மயங்காதே ஊதுகளை என்பதுபோல் பேரை கண்டு மயங்கினேம். ஆனுல் போகப் போகத்தான் தெரிந்து கொண்டோம் இது பண்ணையாள் பாதுகாப்பு சட்டமல்ல நிலச்சுவான்தார் பாதுகாப்பு சட்டமென்பதை!

ஆனுல் ஆச்சாரியார் போனுர் காமராசர் வந்தார். இவர் காலத்தில் உழவன் உயர்ந்தே விடுவான் என்றெல்லாம் பேசிக் கொள்ளப்பட்டது. ஆனுல் இந்த ஏழைப் பங்காளர் ஆட்சியிலே தான் ஏராளமான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். ஆனுல் அவரோ மாடல் சோஷலிசத்தைப்பற்றி பேசிவிட்டு அமைதியாக இருக்க வேண்டுமென்று உபதேசம் செய்கிருர். ஆகஸ்ட் மாதம் நிலச்சீர் திருத்தம் வருகிறது. அமைதியைக் கடைபிடியுங்கள் என்று இதோபதேசம் செய்கிருர். வரப்போகும் நிலச்சீர்திருத்தம், உழவனுக்கு உயர்வளிக்குமோ? அல்லது மிராசுகளுக்கு முனேனுடும் பிள்ளையாக இருக்குமோ? தெரியவில்லை அதைக் காலத்தில் கொண்டு வரக் கூடாதா? அப்போதுதான் உண்மை விளங்கும். விவசாயம் ஆரம்பித்து ஒரு மாதம் சென்றபிறகு சட்டம் (வந்தால்) யாருக்கு சாதகம்! எண்ணிப் பாரும் நண்பரே!

இதுமட்டுமா? குடியிருக்க நல்ல வசதி உண்டா? மருத்துவமனைகள், ரோடு வசதி, விளக்கு வசதி, குடிதண்ணீர் வசதி உண்டா! நரகம் என்று சொல்கிருர்களே வேதாந்திகள்! அது நாங்கள் வசிக்குமிடமோ, என்னவோ! என ஐயுற வேண்டிய நிலையில் நாங்கள் வாழ்கிறேம். 10 ஆண்டுகளுக்கு முன் குச்சு வீடாக இருந்ததெல்லாம இன்று குட்டிச் சுவராகக் காட்சியளிக்கிறது. 1 ஏகர், 2 ஏகர் நிலம் வைத்திருந்தவனெல்லாம் இன்று ஓட்டாண்டியாக ஊர்ஊராகத் திரிகிருன் பலர் நகரங்களிலே கூலி வேலை செய்து பிழைக்கிருர்கள். இன்னும் பலர் வறுமைக்குப் பலியாகிவிட்டனர். வட்டியே விழுங்கி விட்டது பல விவசாயிகளை!

எப்படியெனில் ஒரு விவசாயி தற்சமயம் உள்ள முறைப்படி 5 ஏகர் சாகுபடி செய்தால் கிடைக்கும் லாபம் சுமார் 30 கலம் நெல். அதாவது ஆண்டு பூராவும் கஷ்டப்பட்டு அவன் அடையும் லாபம் நூற்றைம்பது ரூபாய். சாகுபடி செலவே நூற்றைம்பதாய் இருக்கும் செலவுக்கான தொகை நூற்றைம்பதையும் அந்த விவசாயி மார்வாடியிடம் வட்டிக்கு கடன் வாங்கியிருப்பான். தற்சமயம் கிராமங்களில் நடைபெற்றுவரும் வட்டிப்படிப் பார்த்தால் வட்டியே பன்னிரண்டு கலமாகிறது. ஆகையால்அவனுக்குக் கிடைத்த முப்பது கலத்தில் அவன் வட்டிக்கே பன்னிரண்டு கலம் கொடுத்துவிடுவதால் மீதமுள்ளதைக் கொண்டு கடன் கொடுப்பானு! அல்லது அவன் குடும்பச் செலவு செய்து கொள்வானு?

இம்மாதிரியான இடுக்கண்களில் உழவன் சிக்கிக் கொள்ளும்போது அவன் தன் மனைவியின் தாலியைக் கூட விற்கிருன் மானத்தைக் காப்பதற்காக. இவ்வளவும் ஆனபிறகுதான் அவன் ஊரைவிட்டு ஓட ஆரம்பிக்கிருன். இல்லையெனில் தூக்குக் கயிற்றை முத்தமிடத் துணிகிருன். இந்நிலையைப் போக்க மார்க்கமே இல்லையாயென்று எண்ணுகிருயா?

ஏன் இல்லை, மனமிருந்தால் மார்க்கமுண்டு. சர்க்காருக்கு மனந்தான் இல்லையே. ஏனெனில் அண்மையில் டில்லியில் கூடிய தொழில் முக்கூட்டுக் குழுவினர் எங்கட்கென்று ஒரு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்க முடியாதென கூறிவிட்டனர். ஆனுல் இந்திய அரசியல் சட்டம் நாலாவது பாகம் நாற்பத்து மூன்ருவது பிரிவில் 'விவசாயம் அல்லது வேறு தொழில்களைச் சேர்ந்த எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரு செளகரியமான வாழ்க்கைத் தரமும் பொழுதுபோக்கு கலாச்சாரம் பற்றிய வசதிகளும் ஏற்படக்கூடியவாறு வேலையும் வாழ்க்கைக்குப்போதிய கூலியும் கிடைக்கும்படி செய்ய உசிதமான சட்டங்கள் அல்லது பொருளாதார ஏற்பாடு அல்லது வேறு ஏதாவது முறையின் மூலம் சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும்' எனக் கண்டுள்ளது. ஆனுல் நமது மாதிரி சோஷலிச மந்திரிமார்களோ கையை விரித்துவிட்டனர் ஏதும் செய்யமுடியாதென.

எதுஎப்படியாயினும் உழவனுக்கே நிலம் சொந்தமென்ற நிலை ஏற்படாத வரை எங்கள் வாழ்வு வளமடைவது முயற் கொம்பே! சீர்திருத்தமென்று இந்த உருப்படாத நிலச்சீர்திருத்தங்களுக்கே நிலச்சுவான்களுக்கு வக்காலத்து வாங்கி எழுத இந்த நாட்டு செய்தித்தாள்கள் இருக்கும்வரை எங்கே வளமடைவது எங்கள் வாழ்வு!

நண்பா! இவ்வளவு இன்னல்களிலும் எங்களுக்கு கலங்கரை விளக்கமாகக் காட்சியளிப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் கடந்த ஆண்டு இராசப்பையன் சாவடி இராயபுரத்தில் 'திராவிடன்', ஆசிரியர் திரு. என் வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவாற்றினுர்கள். தலைப்பு 'தி. மு. க. வும் விவசாயிகளும்'' என்பது. அவரின் சொற்பொழிவில் காணப்பட்ட ஒவ்வொரு கருத்தும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. கம்யூனிச மயக்கத்திலிருந்து விழித்தோம். உண்மையை உணர்ந்தோம். கம்யூனிஸ்ட்டுகளின் பிற்போக்குத் தன்மையிலிருந்து விடுபட்டு விலகினேம் எப்படி அணி, அணியாக சேர்ந்தோமோ அப்படியே அணி அணியாக விலகி வருகிறேம். (தி.மு.க.வின்) இருவண்ணக் கொடியின் நிழலிலே நிற்க அவாவுறுகிறேம். ஆனுல் அவர்களோ எங்கட்கென தனிப்பிரிவு நடத்த முன்வரவில்லை இதுவரையில். இவர்கள் எங்கட்கென எங்கள் குரலை எழுப்ப ஏன் ஒருதனிப்பிரிவு அமைக்கக்கூடாது?

அருமை நண்பா! உனக்கு ஒரு வேண்டுகோள். நீ கோவையிலே வசிப்பவன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை சந்திக்கும் வாய்ப்பு உனக்கு அடிக்கடிக் கிட்டும். அவர்களில் அறிஞர் அண்ணு அவர்களை என்னைவிட நீ நன்ருய் அறிந்தவன், நெருங்கிப் பழகுபவனுங்கூட. நீ அந்த அறிவின் பெட்டகத்தை சமீபத்தில் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றுல் தவருது எங்கள் நிலைமையை அவரிடம் எடுத்துக் கூறு. கல்வித்துறை வளர்ச்சிக்காக கல்லூரிகட்கும் பள்ளிகட்கும் நிதி தேடியுதவும் அந்த இலட்சிய தீபத்திடம் இங்கு அறியாமை என்னும் இருளிலே அகப்பட்டு அவதிப்படும் எங்களைப்பற்றியும் கூறு. தாய்நாட்டு விடுதலைக்கு தக்கதோர் வழிகாட்டி செல்லும் அத்தனிகரில்லாத் தலைவனிடம் எங்கட்கு அறிவொளி ஏற்றும், அந்தப் பணியிலேயும் கொஞ்சம் நாட்டம் செலுத்தும்படி கூறு. அண்மையில் கூடவிருக்கும் மாநில மாட்டிலாவது, எங்கள்மேல் அக்கரை கொண்டு ஆவன செய்யும்படி திராவிடத்தின் செல்வம் அண்ணு அவர்களிடம் கூறு.

எங்கள் கோரிக்கையை அந்த ஆண்மையாளருக்கு அனுப்பியுள்ளோம். ஆலைத்தொழிலாளர்களாகிய உங்களைப் போன்றவர்களும் எங்கட்காகக் கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொள்ளுங்கள்.

நண்பா! நீண்ட நேரமாக எங்களுடைய வேதனைச்சுழலிலே உன்னை சிக்க வைத்துவிட்டேன். தொந்தரவுசுந்ததற்காகவருந்துகிறேன் இருப்பினும் இந்நாட்டுழவன் நிலையை ஆலைத் தொழிலாளியாகிய நீயும் உணரத்தானே வேண்டும். வணக்கம்.

அன்பன்

சி. எஸ். வேலன், தி. மு. கழகம்.

இராசப்பய்யன்சாவடி.

'திராவிடன்' சந்தா விவரம்

உள்நாடு

●

ஆண்டு சந்தா ...	ரூ. 8	0	0
ஆறுமாதம் ...	ரூ. 4	0	0
தனிப்பிரதி ...	ரூ. 0	3	0

நாடு என்றால் என்ன?

எம்.எஸ்.ராமசாமி

17

இதனை, வெண்ணிக் குயத்தியார் என்னும் பெண் புலவர் காண்கிருர். பெருஞ் சேரலாதன் பெருமை அவருடைய மனதைக் கவர்ந்து விட்டது. நேராக சோழன், திருமா வளவன் கரிகாலனிடத்திற்குப் போகிருர்.

நீர் செறிந்த பெருங் கடலில் காற்றை ஏவல் கொண்டு போர்க் கப்பல்களை நடத்திச் சென்ற ஆண்மையாளன் மரபில் தோன்றியவனே! மதங்கொண்ட யானைகளை யுடைய கரிகால் வளவ! போரின் மேற் சென்று பேராற்றல் தோன்ற வென்றவனே! வளரும் புது வருவாயையுடைய வெண்ணிப் பறந்தலைப் போரில் புறப்புண் பட்டதனுல் நாணமடைந்துவடக்கிருந்ததால் புகழ் உலகம் எய்திய வேந்தன் பெருஞ்சேரலாதன் உன்னிடம் தோற்ருன் என்ருலும் உன்னைவிட சிறந்தவனே! என்கிருர் அவர் பாடலைக் கீழே காண்க:

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்ருேய்! நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை!
மிகப் புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே"
(புறம் 66)

வேந்தர்களில் வீரராஞேர் கடும் சினங் கொண்டபோது பகைவர்மேல்—சூள் உரைத்து—வஞ்சினம் கூறிப் போர்தொடுத்தல் மரபு.

அப்படிச் சூளுரைக்கும்போது அவரவர் நெஞ்சத்தில் எதையெதைப் பெருமையாக முதன்மையாக எண்ணி இருப்பார்களோ, அதனை எடுத்துச் சொல்வது இயற்கை.

அவ்வாறு வஞ்சினம் கூறிய வடதிசை வேந்தரும், தென்றிசை மன்னரும் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் கூறிய வஞ்சினங்களும் இலக்கிய வழக்கில் நிற்கின்றன. அவைகளிலும் தென்னுட்டு பண்பும் வடநாட்டு பண்பும் வேறுபட்டு நிற்பதைக் காணலாம்.

தென்னுட்டான் இவ்வுலக வாழ்வையும் அறத்தையும், குடிகளின் மீது கொண்ட அன்பையும், சான்ருேர்களின் அருமையையும், காதலின் பெருமையையும், வீரத்தின் சிறப்பையும், ஈகையின் முதன்மையையும், சூளுரையில் வஞ்சினத்தில் வெளியிடுகிருன்.

வடநாட்டு வேந்தர்களில் போரின் மீது வஞ்சினம் கூறியோர் இரண்டொருவரே காணப்படுகின்றனர். அதுவும் குறிப்பாக பாரதக் கதையில் வரும் வீமன், அருச்சுனன் இருவர் மட்டுமே உள்ளனர் என்று, அறுதியிட்டுச் சொல்லாம். அந்த இருவரிலும் அருச்சுனன் என்பவனுல் 13-ம்நாட்போரின் முடிவில் கூறியதே வஞ்சினம் என்று கூறத் தகும். அந்த வஞ்சினம் 'சுவர்க்க நரகம்' பற்றியதாக இருக்கிறதே உலக வாழ்வு பற்றியதா இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. அதன் விவரங்களை முறையாக ஆராய்வோம். ஆங்காங்கு வரும்போது உய்த்துணர்க. முதலில் தென்னுட்டு வஞ்சினமொழிகளைக் காண்போம்.

கனகவிசயர்மீது படையெடுத்துச் சென்ற சேரன் செங்குட்டுவன் 'பகைவரை வென்று அவர் தலைமீது கல்லேற்றிக் கொண்டு கற்பின் தெய்வமாம் கண்ணகிக்கு உருவம் அமைப்பேன். அப்படிச் செய்யத் தவறினுல் குடி நடுக்குறா உம் கோலேன் ஆகுக' என்று கூறினன். அதனை வேருேர் இடத்தில் விரிவாகக் கூறி இருக்கிருேம்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்பான் பெருங்கோப்பெண்டிர் என்னும் கற்பின் நல்லாளுக்குக் கணவனுவான். இருவரும் கவிஞர்கள். சிறந்த வீரமக்கள். அந்தப் பெருங்கோப்பெண்டிர் என்பாள் எத்தகையவள் என்பதை அவள் தீப்பாயும்போது கூறிய பாட்டு நன்கு விளக்கும். அதனை வேருேரிடத்தில் ஏற்கனவே கூறி இருக்கிருேம். அந்த மெய்க்காதல் தம்பதிகள் நாட்டாண்டு இன்ப வாழ்வு நடாத்தும்போது, அவர்கள் நாட்டின் மீது மாற்ருர் படை எடுத்து வந்தனர். அப்போது பூதப்பாண்டியன் கூறுகிருன்.

சிங்கம்போலக் கொதித்து மடங்காமல் அடங்காமல் முன்னேறிச் செல்லும் படைகளுடன் வந்து, எனது நாட்டில் போராடுவோம் என்று பகைவேந்தர் கூறியுள்ளனர். அவ்வேந்தரைக் கொடுமைமிக்க போர்க்களத்தில் அலறத் தாக்கி, அவர்கள் தேருடனே புறங்காட்டி ஓடுவதைக் காணேனுயின், சிறப்பு வாய்ந்த—பெருமைமிக்க—மைதீட்டிய கண்களையுடைய (பிரிவறியா இளங்கோப்பெண்டிர்) இவளிடமிருந்தும் பிரிவேனுக!

அறந்திறம்பா அன்புடை அவைக்களத்தில், கல்வி அறிவுத் திறனில்லா ஒருவனை நியமித்து முறைதிரிந்த கொடுங்கோல் செய்தேனுகுக!

புகழ் மலிந்த வைகை சூழ் வளமார் திருநாட்டில் பொய்யாத புதிய வருவாயுடைய மையல் என்னும் ஊர்க்குத் தலைவனுகிய மாவன் என்பானும், நிலைபெற்ற எயில் என்னும் ஊரையுடைய ஆந்தை என்பானும், சொல்லில்மிக்க அந்துவஞ்சாத்தன் என்பானும், ஆதன் அழிசி என்பானும், கடும் சினம் கொண்ட இயக்கன் என்பானும் இவருட்பட நல்லார் பலரும், எனது கண்களைப்போலப் பழகிக்கலந்த நண்பர்களுடன் இன்புறு செருக்கும் மகிழ்ச்சியும் தவறியவனுகி, மக்களைக் காக்கும் பாண்டியர் குலத்தில், சிறந்த பாண்டிநாடு காக்கும் காவலில் நீங்கி பிறநாடுகளில் பிறந்து, இக்குடிப் பிறப்பை நீங்குவேனுக என்று வஞ்சினம் கூறுகிருன்.

மடங்கலில் சினைஇ மடங்கா உள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்நாடு பொருதும் என்ப! அவரை
ஆர்அமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறம் காணேன் ஆயின் சிறந்த
பேர்அமர் உண்கண் இவளினும் பிரிக!
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக! மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பில்
பொய்யா யாணர் மையல் கோமான்
மாவனும் மன்எயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்ருே!
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலம் காவலின் ஒரீஇப் பிறர்
வன்புலம் காவலின் மாறியான் பிறக்கே"
(புறம் 71)

தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் இளைஞனுக இருக்கும்போதே பாண்டிநாட்டு வேந்தனுக முடிசூட்டப்பட்டான். அவன் பெருவீரன. தமிழ்ப் பெருங்கவிஞன். ஆனுல், வயதில் சிறியவன். எனவே, சேரனும் சோழனும் மற்றும் சிற்றரசர் ஐவரும் ஆக எழுவர். அவனுடைய ஆற்றலை அறியாமல் அவனையும், அவன் நாட்டையும் இகழ்ந்து கூறிப் படை எடுத்து வந்தனர்.

அந்தச் செய்தி ஒற்றர் வாயிலாக பாண்டியன் நெடுஞ்செழியன் அறிந்தான் கடுஞ் சினங் கொண்டான். வஞ்சினம் கூறிப் போர்க்கெழுந்தான். வென்ருன். அவன் போர்மேல் சென்றபோது கூறிய வஞ்சினம் வருமாறு:

அவன் நாட்டைச் சிறப்பித்துக் கூறுவோர் நம்மால் எள்ளி நகையாடத் தக்கவரே யாவார். அவனே சிறுவன் என்றெல்லாம் எனது நெஞ்சு உளையக் கூறி, ஒலிக்கின்ற மணியுடன் பரந்த அடிகளையும், பருத்த கால்களையுமுடைய உயர்ந்த யானையும், தேரும், குதிரையும், படை சேர்ந்த மறவரையுமுடைய தருக்கால், எனது பேராற்றலுக்கும் அஞ்சாமல், உடலில் சினமும் செருக்கும் பெருகிப் புன்மொழி கூறிய வேந்தர் அனைவரையும் அரிதான போரில் சிதறத்தாக்கி, அவர்களை முரசத்தோடு கைப்பற்றேனுயின், எனது குடை நிழலில் பொருந்தி வாழ்வோர் அனைவரும் தஞ்சம் புகநிழலின்றி எங்கள் வேந்தன் கொடியன் என்று கண்ணீர பெருக்கி குடிகள் பழிக்கும் கோலேன் ஆகுக

ஓங்கிய சிறப்பும் மேம்பட்ட கல்வி கேள்வியுமுடைய மாங்குடி மருதன் முதல்வனுக உலகத்தில் நிலையான பலர் புகழ் சிறப்பெய்திய புலவர்கள் எனது நாட்டைப் பாடாது ஒழிவாராக!

என்னுல் ஆதரிக்கப்படும் கேண்மையாளர் துயரம் கூர இரப்பவர்க்குக் கொடாத வறுமையை நான் அடைவேனுக! என்கிருன்,

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவன்! என உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினம்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணுது
கொடியன் எம்இறை எனக்கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி!
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக என் நிலவரை
புறப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் பெறவே
(புறம் 72)

இதுபோலவே சோழன் நலங்கிள்ளியின் காலத்தில் அவன் நாட்டின் மீது வேறொருவன் படையெடுத்து வந்தான். அப்போது அவன் சொல்கிருன்.

மெதுவாக வந்து என் காலடியில் வணங்கி 'ஈ' என இரப்பாராயின், சீரிய முரசமைந்த இந்த அரசாட்சி மட்டுமென்ன? உயிரை வேண்டுமென்ருலும் கொடுத்திருப்பேன்! எனது படை வீரரின் ஆற்றலையும் மதியாமல் என் உள்ளத்தை இகழ்ந்த அறிவிலி எவனுயிருந்தாலும் அவன் உறங்குகின்ற புலியை இடறிய குருடனே யாவான்! அவன் உயிர் தப்பிச் செல்வதும்அருமையே. மூங்கில் இலைகளைத் தின்ன வந்த யானைக் காலில் அகப்பட்ட முளை மூங்கில்போல அவன் வருந்தும்படி அங்கே சென்று போர் புரியேனுயின், மாசற்ற நெஞ்சத்தில் காதல் கொள்ளாத வேசையரின் புணர்ச்சியிடை எனது மாலை துவள்தாக, என்ருன். அது வருமாறு:

"மெல்ல வந்துஎன் நல்லடி பொருந்தி
ஈஎன இரக்குவ ராயின் சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்?

இன்னுயிர் ஆயினும் கொடுக்குவன்!
[இந்நிலத்து
ஆற்றல்உடையோர் ஆற்றல் போற்றுதுஎன்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதில்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே! மைந்து
கழைதின் யானைக் காலகப்பட்ட [டைக்
வன்திணி நீண்முளை போலச்சென்றுஅவண்
வருந்தப் பொரேனாயின் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே!"
(புறம் 73)

இதுவரை தமிழர்கள் கூறிய வஞ்சினங்களைக் கண்டோம். இனி, ஆரியர் கூறிய வஞ்சினங்களைக் காண்போம்.

பாரதத்தில் பாஞ்சாலியை இழுத்து வந்து துகிலுரிந்தபோது வீமன் சொல்கிறான் :

"வண்டாரும் குழல்பிடித்துத் துகில் உரிந்
உடற்குருதி வாரி அள்ளி [தோர்
உண்டாகம் குளிர்வதன்முன் இக்கரத்தால்
புனல் உண்ணேன் ஒருகால் என்கைத்
தண்டால்வெம் புனல்ஏற்றி மீதெழுந்து
விழுந்திவலை தண்ணீ ராகக்
கொண்டாவி புரந்திடுவன் இதுவிரதம்
எனக்கெனவும் கூறினனே"
(வில்லிபாரதம் சூது 257)

இதன் பொருள் :

வண்டுகள் மொய்க்கும் கூந்தலைப் பிடித்து துகில் உரிந்தவனைக் கொன்று, அவன் உடலிலிருந்து வரும் இரத்தத்தை வாரிக் குடித்து, எனது உடம்பு குளிர்ச்சி பெறுமுன்னால், இந்தக் கைகளால் தண்ணீர் குடிக்க மாட்டேன். ஒருவேளை தண்ணீர் குடிக்க நேரிட்டால், அப்போது என் கையிலுள்ள தண்டாயுதத்தால் தண்ணீரை அடித்து அது மேலே எழுந்து விழும்போது குடித்து உயிரைக் காப்பாற்றுவேன். இது எனது விரதம் என்கிறான்.

இதே பாரதம் 13-ம் நாட்போரில் அபிமன்யு என்பவனை சயத்திரதன் அல்லது சயிந்தவன் என்பவன் கொன்று விட்டான். அதையறிந்த அபிமன்யுவின் தந்தை அருச்சுனன் "மறுநாட்போரில்" பொழுது விழுவதற்குள் சயிந்தவனைக் கொல்லாவிட்டால் தீயில் விழுந்து சாவேன்' என்று வஞ்சினம் கூறுகிறான். அது வருமாறு :

"சிந்துபதி யாகியசெ யத்திரத னைத்தேர்
உந்தமரில் நாளைஉரு மேறெனஉ டற்று
அந்திபடும் அவ்வளவின் ஆவிகவ ரேனேல்
வெந்தழலின் வீழ்வன்இது வேதமொழி
என்றான்"
(வில்லி. பா. 13-ம் போர் 179)

இதன் பொருள்

சிந்து தேசாதிபதியாகிய செயத்திரனை தேர் செலுத்தும் போர்க் களத்தில் நாளை இடியேறுபோலத் தாக்கிப் பொழுது விழுமுன் உயிரைப் பறிக்கா விட்டால் கொடிய தீயில் வீழ்ந்து சாவேன் இது வேதவாக்கு என்றான்.

"இன்றமரில் வாளபிமன் இன்னுயிரி முக்கக்
கொன்றவனை நாளைஉயிர்கோறல்புரியேனேல்
மன்றிலொரு சார்புற வழக்கினை உரைக்கும்
புன்தொழிலர் வீழ்நரகு புக்குழலு வேறு"
(ஷை ஷை 180)

இதன் பொருள் :

இன்றைப்போரில் அபிமன்யு இன்னுயிரிழக்கும்படி கொன்றவனை, நாளைக்குள் உயிரைக் கொல்லாவிடின் நீதிமன்றத்தில் ஒருதலை வழக்குப் பேசும் புல்லர்கள் வீழும் நரகத்தில் புகுந்து உழல்வேனாக.

"மேந்தமரில் என்மகன்மு டித்தலைது ணித்த
பாதகனை நான் எதிர்படப்பொருதிலேனேல்
தாதையுட னேமொழித காதன பிதற்றும்
பேதை மகன் எய்துநெறி பெற்றுடையன்
(ஷை ஷை 181) [ஆவேன்"

இதன்பொருள் :

முரண்பட்ட போரில் என்மகன் முடித்தலையை அறுத்த பாதகனை நான் எதிர் நின்று அவன் வீழும் போர் செய்யேனாயின் தந்தையிடம் தகாத மொழிபேசும் அறிவற்றவன் செல்லும் வழியில் சென்றவனாவேன்.

'சேயனைய என்மதலை பொன்றஅமர்
செய்தோன்
மாயமுன்அடர்த்துவய வாகைபுனையேனேல்
தாயர்பசி கண்டுநனி தன்பசித ணிக்கும்
நாயனைய புல்லருறு நரகில்உறு வேனே"
(ஷை ஷை 182)

இதன்பொருள் :

முருகனுக்கு ஒப்பான என் குழந்தை சாகும்படி போராடியவனை போராடி சாகடித்து வாகை சூடாமல் இருப்பேனாயின் தாயின் பசியைத் தணிக்காமல் தன்பசியைத் தணிக்கும், நாய் போன்ற புல்லர் செல்லும் நரகத்தில் நானும் செல்லுவேன்.

"வஞ்சனையில் என்மகனை எஞ்சமுன்ம
[லைந்தோன்
நெஞ்சம்எரி யுண்ணஅமர் நேர்பொருதி
[லேனேல்
தஞ்சமென வந்தவர்த மக்கிடர்வி ளைக்கும்
நஞ்சனைய பாதகர் நடக்கும்நெறிசேர்வேன்"
(ஷை ஷை 183)

இதன்பொருள் :

வஞ்சகமாய் என்மகனைப் போராடிக் கொன்றவனுடைய மார்பு தீயில் வீழ்ந்தாகும்படி அவனை நேரில் போர் செய்து கொல்லேனாகில், தஞ்சம் புகுந்தோர்க்கு இடர்விளைக்கும் நஞ்சுக்கொப்பான பாதகர் செல்லும் நரகத்தில் சேர்வேன்.

"வினையிலென்ம கன்றனுயிர் வேறுசெய்வித்
[தோனைக்
குனிசிலையில்நாளையுயிர்கோறல் புரியேனேல்
மனைவியய லான்மருவல் கண்டும்அவள்
[கையால்
தினையளவும் ஓர்பொழுது தின்றவனும் .
(ஷை ஷை 184) [ஆவேன்"

இதன் பொருள் :

சூழ்ச்சியால் என்மகன் உயிரை வேறுபடுத்தியவனை வளைந்த வில்லால் நாளை உயிரைக் கொல்லாமல் விடுவேனாயின் தனது மனைவியை அயலான் பெண்டாளக் கண்டிருந்தும் அவள் கையால் தினையளவேனும் ஒரு பொழுது உண்டவனாவேன்.

மேலே கண்ட பாட்டுக்களில் முடிவு தோறும் நரகம் சேர்வதையே முக்கியமாகக் கூறப்படுவது கவனிக்கத் தக்கது. இத்தகைய கருத்துக்கள் தமிழர்களில் வஞ்சின மொழிகளில் எங்கும் காணப்படாதிருப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது.

ஏதோ சுவர்க்கம் சேர்வதே நிச்சயமாகி இருந்தது போலவும், இந்த வஞ்சினம் நிறைவேறவில்லையென்றால் 'சுவர்க்கம் வேண்டாம் நரகமே போதும்' என்று, அருச்சுனன் மறுத்துக் கொண்டிருப்பது போலவும், தீட்டப்பட்டுள்ள முறை ஆன்மார்த்த தத்துவம்—தெய்வதத்துவம், ஆகிய கோட்பாடுகளையே கேலி செய்யக்கூடியதாக அமைந்திருக்கிறது.

இதுதவிர மேற்கண்ட கவிகளில் ஆங்காங்கு ஊடுருவி நிற்கும் பொது நீதிகள் ஆரியப் பண்பின் காரணமாகச் சொல்லப்பட்டதென்று கூறுவதற்கில்லை. வில்லிபுத்தூராரின் தமிழ்ப் பண்புக்கேற்ப பொது நீதிகளைவலியநுழைத்துஇப்பாடல்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றே கருதுகிறோம்.

ஏனெனில் 'மனைவியை அயலான் மருவல் கண்டும் அவள் கையால் தினையளவும் ஓர் பொழுது தின்றவனும் ஆவேன்' என்பது ஆரியர்களின் பழக்க வழக்கங்களிலும் இலக்கியங்களிலும் காண முடியாத ஒன்றாகும்.

சந்திரனால் கற்பிழந்த தாரை, இந்திரனால் கற்பிழந்த அகலிகை முதலாயினோர். தண்டிக்கப்பட்டபின் அவரவரின் கணவன்மாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டனர் என்பதே தக்க சான்றாகும். இதுபோன்ற கதைகள் ஆரியரின் கொள்கைகளுக்குச் சான்றாக ஏராளமிருக்கின்றன.

இந்தப் பாரதத்தின் போர்ப்பகுதியை வியாசபாரதம் போன்ற ஆதி ஏடுகளில் பார்த்தால் உண்மை விளங்கும். நமக்கு அத்தகைய ஏடுகள் கிடைக்கவில்லை. ஆதலால் இப்படித்தான் என்று நம்மால் துணிய முடியவில்லை. அது கிடைத்தவர்கள் ஒப்பு நோக்கித் துணிவதுடன் நமக்கும் அறிவிப்பாராக.

இதனை இத்துடன் விடுத்து வடவர்களின் தொழில்முறை குறித்த இலக்கியங்களை சிறிது காண்போம்.

ஆரிய இலக்கியங்களில் உழவுத்தொழில் பெரிதும் இழிவாகக் கூறப்படுகிறது. பார்ப்பனர், எவ்வளவு இழிதொழில் செய்து வயிறு வளர்த்தாலும் உழவுத் தொழில் செய்து வயிறுவளர்க்கக் கூடாதாம்.

அதுபோலவே எத்தகைய கேடான நிலைமை ஏற்பட்டாலும் கடல் கடந்து போகக் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது

தமிழ் இலக்கியங்களில் உழவுத்தொழில் முதன்மையானதாகச் சொல்லப்படுகிறது. தமிழ் இலக்கியங்களில் நாட்டின் சிறப்புப் பற்றிக் கூறும்போதெல்லாம் அங்குள்ளவிவசாயத்தைப்பற்றியே பெரிதும் போற்றிப் புகழ்ந்திருப்பதைக் காணலாம்.
"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்
றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்"

என்று உழவுத் தொழிலை சிறப்பித்துக் கூறிய வள்ளுவனார் அதற்கென குறளில் ஒரு அதிகாரமே வகுத்தார்.

'திரைகடல் ஓடியும்திரவியம்தேடு' என்று ஔவையார் கூறினார். தமிழர்கள் கடல்மீது செல்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் என்பதை சங்க இலக்கியங்களில் எங்கும் காணலாம்.

தமிழ் இலக்கியங்களில் சூதாடுவதை ஒரு பாதகச் செயலாகக் கூறப்பட்டிருக்கிறது. வடவர் இலக்கியங்களில் சூதாட்டம் ஒரு பொழுது போக்காகக் கருதப்பட்டிருக்கிறது. தருமன், நளன் முதலான அரசர்களை பெரும் சூதாடிகளாக சித்தரிக்கப்பட்டுள்ளனர். அந்தக் காரணத்தினாலேயே பொதுமக்களின் அன்புக் குரியவர்களாக வளர்ச்சி யடைந்தனர் என்று கருதும்படி அவர்களுடைய வரலாறு வர்ணிக்கப் படுகிறது. தருமன், நளன் இவர்களைப்போல் மனைவி மக்களைப் 'பணயம்' வைத்துச் சூதாடும் மூடமன்னர் ஒருவர்கூட தமிழகத்தில் இருந்ததில்லை.

1954-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வடநாட்டான் ஒருவன் தனது மனைவியை சூதாட்டத்தில் பந்தயம் கட்டித் தோற்றான் என்று, ஒருசெய்தி தமிழ்ப் பத்திரிகை பலவற்றில் வெளிவந்தது. இந்த நாளிலும் அத்தகைய சூதாடிகள் தோன்றுவதற்கு என்ன காரணம்? அவர்களுடைய இலக்கிய போதனை தவிர என்ன இருக்க முடியும்? பத்திரிகைக்குக் கிடைத்த செய்தி ஒன்று என்றால் — கிடையாதவை எத்தனையோ! மனைவியைத் தோற்றவன் ஒருவன் என்றால் வீடு வாசல்வரை தோற்றவன் எத்தனை பேரோ!

'சூதுவிரும்பேல்' என்றார் ஔவையார். நீதிநூற்கள் அனைத்தும் சூதாட்டத்தைக் கண்டிக்கின்றன தமிழில்!

வேண்டற்க வென்றிடினும் சூதினைவென்ற
தூஉம் தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று"

என்கிற குறட்பாவை முதன்மைக்கொண்டு திருக்குறளில் ஒரு அதிகாரமே வகுத்தார். சூதைப்பற்றி வள்ளுவர் பாடல்களை ஒப்பு நோக்கும்போது தமிழருக்கும், வடவருக்கும் இடையில், மலையும் மடுவும் போன்ற வித்தியாசமிருப்பதைக் காணலாம். இதுவரை வடவரின் பொருட்பால்பற்றி ஆராய்ந்தோம். இனி, அவர்களுடைய காமத்துப்பால் குறித்து ஆராய்வோம். (தொடரும்)

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

16

டேனிஷ் மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த ஸ்சூல்ட்ஸ் தரங்கையைவிட்டு சென்னைக்குச சென்றுவிட்ட பின்னர் **ப்ரசியர்** என்பாரும் (Pressier) **வால்தர்** என்பாரும் (Walther) மிஷன் வேலைகளை தீவிரமாகத் தொடர்ந்து செய்து வந்தனர். வால்தர் என்பார் ரோமன் கத்தோலிக்கர்கள் செய்துவந்தத் தகாத பிரசாரங்கட்குத் தக்கபடி பதிலிறுத்து பிராடஸ்டன்ட் மத குருமார்களின் உண்மை பிரசாரத்தின் பெருமையை எடுத்துக் கூறினர். **பாதர் பெஸ்கி** என்ற இத்தாலிய பாதிரிக்குத் தகுந்த விடையாக தமிழ் மொழியில் ''தென்னிந்திய கிருஸ்துவ மத வளர்ச்சி சரித்திரம்'' என்ற வரலாற்று நூல் எழுதினர். அதிலிருந்து பெஸ்கி பாதர் ப்ராடஸ்டன்ட் பாதிரிகளைப் பற்றி பேசுவதை விட்டுவிட்டார். பாதர் பெஸ்கி என்பார் தமிழர்களால் **வீரமாமுனிவர்** என்று புகழப்பட்டவர் ஆகும். **ஆரான் (Aaron)** என்ற தமிழ் கிருஸ்துவர் மேற்கூறிய டேனிஷ் பாதிரிகட்குத் துணையாக நின்று பள்ளிகள் நிறுவுவதிலும் கல்வி அறிவு பரப்புவதிலும் ஈடுபட்டுவந்தது குறிப்பிடவேண்டியதாகும்,

இடையே உள்நாட்டுப் போர்களின் காரணமாக டேனிஷ் பாதிரிகளின் காரியங்கள் தடைபட்டன. 1758-ல் சமா

சென்னை கிருஸ்தியன் கல்லூரி வரலாறு

தானம் நிலவிய பின்னர், **கடலூரில்** நடைபெற்று வந்த சர்ச்சும் பள்ளியும் மிஸ்டர் **ஹட்டிமன் (Hutteman)** என்பாரால் தொடர்ந்து நடைபெற்று வந்தன. சென்னை **வேப்பேரி** சங்கம் **பேப்ரிசியஸ்** என்பாராலும் **ப்ரீதப்ட்** என்பாராலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது. மிஸ்டர் **வீட்ப்ராக்** என்பார் மேல்நாட்டவர்களாலும் உள்நாட்டு மக்களாலும் புகழப்பட்டார். அவர் ஆற்றிய அரும் பணிகளை யாவரும் புகழ்ந்தனர். இவர் 1776-ல் இறந்தார். இவரைப் போன்றே **செக்லின், க்வீன் கோகல்கஙப்** ஆகியோர் நீண்ட நாட்கள் சிறந்த பணிகள் பலப் புரிந்து மறைந்தனர். இவர்களைத் தொடர்ந்து வந்த **டாக்டர் ஜான்** என்பாரும் **டாக்டர் ராட்லர்** என்பாரும், **டாக்டர் காம்மீரர்** என்பாரும் பல ஆண்டுகள் தொண்டாற்றி புகழ் பெற்றுர்கள். இவர்கள் யாவரும் கிருஸ்துவ மதப்பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு சர்ச்சுகள் நிறுவுவதில் கவனமாக இருந்து வந்ததுடன் நாட்டுமக்களின் கல்வி முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தி வந்தனர் என்பதும் முன்னேற்ற முறையில் பலப் பள்ளிகளை நிறுவினர் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

இவர்களுடைய நற்காரியங்கள்யாவும் பத்தொன்பதாவது நூற்றுண்டு துவக்கத்தில் மங்கத் துவங்கின. இவர்களைத் தொடர்ந்து வேலை செய்வார் ஹாலேயினின்றும் யாரும் வரவல்லை. ஹாலேயில் பணியாற்றி வந்த **ஈவாங்க்லிக்கல் சர்ச் சங்கத்தினர்** தம் பணியில் அக்கரையற்றவராய் இருந்தனர்,

மேற் கூறப்பட்ட பாதிரிகள் யாவரும் இளம் வயதிலேயே திராவிட நாட்டை வந்தடைந்தவர்கள், அவர்களின் இளம் பருவத்தின் ஆற்றலும் முதிர்ந்த பருவத்தின் அறிவும் திராவிடர்களின் முன்னேற்றத்திற்கே பயன் படுத்தப்பட்டன. அவர்கள் உடலும் உயிரும் திராவிட நாட்டின் வளர்ச்சிக்காகவே மடிந்தன. அவர்களது தொண்டுகள் யாவும் திராவிடர்களால் புகழத் தக்கன. நினைவு கூறத்தக்கன. வாழ்க அவர்தம் புகழ்!

அவர்கட்குப் பின்னர் நவீன கிருஸ்துவ சங்கத்தினர் வரலாயினர். **லண்டன் மிஷனரி சங்கம், சுதந்திர சர்ச் சங்கம், வெஸ்லியன் மிஷன் சங்கம், அமெரிக்க சுதேசி மிஷன் சங்கம், லூதரன் மிஷன் சங்கம், ஸ்காடிஷ் மிஷன் சங்கம், ப்ராபகேஷன் சங்கம்,** ஆகியவைகளினல் கிருஸ்துமதப் பிரசார காரியங்கள் புது வேகத்துடன் நடத்தப்பட்டன. இச்சங்கத்தினர் யாவராலும் சென்னையில் மிகவும் விரிந்த முறையில் தொண்டாற்றப்பட்டு வந்தது. சர்ச்சுகளும் பள்ளிகளும் பெரும்அளவில் நிறுவப்பட்டன. வெஸ்லியன் மிஷன் சங்கத்தினரும், லண்டன் மிஷன் சங்கத்தினரும், ப்ரீசர்ச் மிஷனரி சங்கத்தினரும் **ராயப்பேட்டையிலும், ஜியார்ஜ் டவுனிலும்** செல்வாக்குப் பெற்றிருந்தனர். ப்ராபகேஷன் சங்கத்தினர் **புரசவாக்கம், வேப்பேரி** ஆகிய இடங்களில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அமெரிக்கன் சங்கத்தினர் **மவுண்ட்ரோடு, சிந்தாதரிப் பேட்டை** ஆகிய பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

ஸ்காட்லாந்து சர்ச் மிஷனைச் சேர்ந்த **ரெவரண்ட் ஜான் ஆண்டர்சன்** என்பார் 1837-ல் **ஜெனரல் அசெம்பிளி பள்ளி** என்ற பெயரில் ஒரு கல்வி ஸ்தாபனத்தை நிறுவினர். ரெவரண்ட் ஆண்டர்சன் 1837-ல் ஸ்காட்லந்து மிஷனின் முதல் பாதிரியாக சென்னை வந்து சேர்ந்தவர். வந்த சிறிது நாட்களுக்குள்ளாகவே இந்தப் பள்ளியைத் **துவக்கினர்.** 'நல்ல முறையில் கல்வி புகட்டுவதன் மூலம் கிருஸ்துவ வேதத்தின் உட்பொருளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதே இப்பள்ளியைத் துவங்குவதின் நோக்கமாகும். ஆங்கில மொழியை நன்கு படிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுக்கப்படும். ஆங்கிலமொழி இலக்கணம், இலக்கியம் ஆகியவைகளை விரிவாக பயிற்றுவிக்கப்படும், தர்க்கம், வானசாத்திரம், அரசியல், பொருளாதாரம், உயர்தர கணக்குகள், அல்ஜீப்ரா முதலிய பாடங்களில் நவீன முறைப்படி பாடஞ் சொல்லிக் கொடுக்கப்படும். யேசு கிருஸ்துவின் பொன்மொழிகளின் உயர்வும் மேன்மையும் விரிவாகப் புகட்டப்படும்.'' இப்படிப்பட்ட நோக்கத்துடன் துவக்கப்பட்ட இந்த உயர்தரக் கல்விக் கூடமானது மக்களால் நன்கு வரவேற்கப்பட்டது. படிப்போரின் தொகையும் அதிகரித்து வந்தது. இந்த ஸ்தாபனத்துக்குக் கிடைத்த பெரும் ஆதரவைக்கண்ட ஆண்டர்சன் மேலும் பல இடங்களில் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை துவக்கவிரும்பினர். 1839-ல் **காஞ்சீபுரத்திலும்,** 1840-ல் **செங்கல்பட்டு, நெல்லூர்** நகரங்களிலும்' 1841-ல் **திருவல்லிக்கேணியிலும்** பள்ளிகள் நிறுவப்பட்டன. இதேகாலத்தில் அதாவது 1841-ல் **சென்னை பல்கலைக் கழகமும்,** 1842-ல் **பச்சையப்பன் கல்லூரியும்** நிறுவப்பட்டது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியனவாகும். ஜான் ஆண்டர்சனின் இப்பெருங் காரியத்திற்கு உடனிருந்து உதவி செய்தவர்கள் **ரெவரண்ட் ராபர்ட் ஜான்ஸ்டன், ரெவரண்ட் ஜான் ப்ரெயிட்வுட்** ஆகியோர் ஆவர். சென்னையில் துவக்கப்பட்ட பள்ளியானது 1847-ல் சென்னை **எஸ்ப்ளனேட்** புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. பின்னர் இப்பள்ளி **சென்னை கிரிஸ்தியன் காலேஜ்** என இந்தியா முழுவதும் பெயர் பெற்றதாகிவிட்டது. **டாக்டர் மில்லர்** என்பார் பிரின்சிபாலாக இருந்து தமது விடாமுயற்சியினல் இதை இந்தியாவிலேயே ஒரு சிறந்த கல்லூரியாக கொண்டாடும்படிச் செய்தார், டாக்டர் மில்லர் அவர்களின் தொண்டு சென்னை கிருஸ்தியன் காலேஜ் வளர்ச்சிக்குப் பெரும் அடிப்படையாக அமைந்தது

லீப்சிக் லூதரன் மிஷன் சங்கத்தினர் டேனிஷ் மிஷன் சங்கத்தின் வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தனர்; **ரெவரண்ட் எச், கார்டிஸ்** என்பார் 1840-ல் வந்து சேர்ந்தார், அவரைத் தொடர்ந்து பலர் வந்தனர். இவர்கள் யாவரும் **தரங்கம்பாடியிலும்** அதைச் சேர்ந்த **பொறையாறிலும்** தொண்டாற்றினர், **மாயவரம், புதுக்கோட்டை** முதலிய நகரங்களில் தம் ஸ்தாபனங்களை நிறுவினர், கிருஸ்துவப் மதப் பிரசாரமும் பள்ளிக்கூடங்கள் விஸ்தரிப்பும் இங்கெல்லாம் நடைபெற்று வந்தன. பிராபகேஷன் சங்கத்தினர் **தஞ்சையிலும், திருச்சியிலும்** தொண்டாற்றினர், **கும்பகோணம் பூசலூர்** முதலிய இடங்களில் இவர்களால கிருத்துவ மதத் தொண்டும் கல்வித் தொண்டும் செயயப்பட்டன. வெஸ்லியன் மிஷன் சங்கத்தினர் **மன்னார்குடி, நாகப்பட்டினம்** ஆகிய இடங்களில் கிருஸ்துவ ஸ்தாபனங்களும் கல்விக்கூடங்களும் நிறுவினர். அமெரிக்கன் மிஷன் சங்கத்தினர் **மதுரை, திண்டுக்கல்** ஆகிய இடங்களில் செல்வாக்கு அடைந்தனர் இவர்களால் **பசுமலையில்** ஒரு சர்ச்சும் பள்ளியும் நிறுவப்பட்டன, **பழனியிலும்** இவர்களது தொண்டு இடம் பெற்றது.

மேற்கூறிய சங்கங்கள் ஆற்றிவந்த தொண்டு விவரங்களைப்பற்றி **ஜோசப் முல்லன்ஸ்** 1854-ல் கூறியுள்ளதாவது

''தற்போது தமிழ் நாட்டு கிருஸ்துவ மிஷனரிகள் நல்ல புகழ் அடைந்துள்ள

சென்னை நகரில் கல்விக்கூடங்கள் வளர்ச்சி

னர், சிற்றூர்களிலும் நகரங்களிலுமாக 67 பாதிரிகள் கிருஸ்துவ மதப் பிரசாரம் செய்தும், ஆங்காங்கே சர்ச்சுகள் நிறுவியும் கல்விக்கூடங்கள் கண்டும் நல்ல தொண்டுகள் செய்துள்ளனர். தமிழ்நாட்டு கிருஸ்துவ பிரசாரகர்களின் தறபோதைய எண்ணிக்கை 130 ஆக உள்ளது. இவர்களால் நடத்தப்பட்டு வரும் சர்ச்சுகளில் சுமார் 16130 பேர்கள் கலந்து கொள்ளுகின்றனர். உள்நாட்டு மொழிப்பள்ளிகளில் 7100 சிறுவர்களும் 2100 சிறுமிகளும் கல்வி பயின்று வருகின்றனா. ஆங்கில மொழி பள்ளிகளில் 2840 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய ஊர்களில் தொண்டு செய்து வரும் மிஷனரிகள பெரும் புகழ் அடைந்துள்ளனர். **கோயம்புத்தூரிலும், மதுரையிலும்** இப்பாதிரிகள பல தொண்டுகள் ஆற்றியுள்ளனர். இந்நகரங்களில் உயர்ந்த முறையில் பல பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் உள்நாட்டு மக்களும் கிருஸ்துவர்களும் வேறுபாடின்றி பயின்று வருகின்றனர். இப்படியாக முல்லன்ஸ் தமது 'தென்னிந்திய கிருஸ்துவ சங்கங்கள் என்ற நூலில்கூறுவது கவனிக்கத்தக்கதாகும்.

திருநெல்வேலியிலும், தென்திருவாங்கூரிலும் இம்மிஷனரிகளால் ஆற்றப்பட்டத் தொண்டின் பெருமையைப் பற்றி புகழாதார் யாருமில்லை. இப்பகுதி மக்களில் பெரும்பாலார் சாணுர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். கீழ்சாதியினராக ஒதுக்கப்பட்டிருந்தவர்கள், இந்து சமூகத்தினரால் அலட்சியப்படுத்தப்பட்டு வந்த இம்மக்களை பாதிரிமார்கள் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தனர். அவர்களும் மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை தமது தொண்டுகளின் பெருமைமூலம், மெய்ப்பித்து இந்து மதத்தினரை தலைகவிழச் செய்தாகள். ஆயிரக்கணக்கில் இம்மக்களை கிருஸ்துவர்களாக மாறும்படிச் செய்து அவர்கட்கு உயர்ந்த அந்தஸ்தை அளித்து ஆதரித்தனர். 1780-ல் டேனிஷ் மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த **ச்வார்ட்ஸ்** இங்கு முதன் முறையாக வந்தார். 1785-ல் இரண்டாவது முறையாக வந்தபோது திருநெல்வேலியில் ஒரு சர்ச் கட்டுதற்கு ஏற்பாடு செய்தார். சில உள்நாட்டு கிருஸ்துவ குருமார்களையும் ஆசிரியர்களையும் நியமித்து கிருஸ்துவமதப் பிரசாரம் செய்து வரும்படி ஏற்பாடு செய்தார். **பாளையங்கோட்டையிலும்** ஒரு சர்ச் கட்டும்படி ஏற்பாடு செய்தார். இந்த உள்நாட்டு குருமார்களில் **சத்தியநாதன்** என்பார் ஒருவர். இவரால் நல்ல காரியங்கள் பல செய்யப்பட்டன. 1791-ல் **ஜெனிக்கே** எனும் ஜெர்மனி பாதிரியார் சாணர்களின் முனனேற்றத்திற்கான காரியங்களை கவனிக்கும்படி நியமிக்கப்பட்டார்; இவர் பாளையங்கோட்டையை தமது தலைமை இடமாகக் கொண்டார், இவரும் சத்தியநாதனும் பல ஊர்களுக்கும் சென்று கிருஸ்துவ மதப் பிரசாரம் செய்தனர். **குற்றலம், பாபநாசம், இராமநாதபுரம்** ஆகிய எல்லா இடங்களிலும இவர்களது புகழ் ஓங்கியது. இப்படியாக திருநெல்வேலி மிஷன் சுருசுருப்பாக வேலை செய்து வந்தது. ஜெனிக்கே 12 வருடம் தொண்டாற்றி இளம் வயதிலேயே காலமானுர்;

1820-ல் **ரேனியஸ்** எனும் சர்ச் மிஷன் சங்கப் பாதிரியார் **பாளையங்கோட்டையை** தலைமை இடமாகக் கொண்டு தொண்டாற்றி வந்தார். பாளையங்கோட்டைக்கு வருமுன்னர் சென்னையில் நான்காண்டுகள் கிருஸ்துவ மதப் பிரசாரத்திலும் கல்வி அபிவிருத்தியிலும் ஈடுபட்டார். இவரைப்பற்றி **திருமயிலை சீனிவேங்கடசாமி ''கிருஸ்தவமும் தமிழும்''** எனும் நூலில கூறுவதாவது. ''நல்லொழுக்கமும் நற்குணமும் பொருந்திய இவர் சமயத்தொண்டு மட்டுமின்றி, பற்பல தரும காரியங்களையும் செய்திருக்கிறுர், டோனு என்னும் **ஜெர்மானியப் பிரபுவின்** பொருளுதவி பெற்றுப் பாளையங்கோட்டைகு தெற்கே 25 மைல் தூரத்தில் ஒரு நிலத்தை வாங்கி, அதற்கு டோனுவூர் என்று பெயரிட்டு, அதில் கிருததுவர்களைக் குடியேற்றினர். தர்ம சங்கம் என்ற ஒரு சங்கம் ஏற்படுத்தி, அதன் மூலமாகப் பாடசாலைகள் வீடுகள் கோயில்கள் முதலியன கட்டுவதற்கு நிலங்கள் வாங்கிக் கொடுத்தார். இச்சங்கத்தின் உதவியினுல்தான் திருநெல்வேலியில் **சாந்தபுரம், சந்தோஷபுரம்** முதலிய பன்னிரண்டு கிராமங்கள் ஏற்பட்டன. புத்தகம் எழுதும் சங்கம் ஒன்றுண்டாக்கி, அதன் மூலமாகப் பல புத்தகங்களை வெளியிடச் செய்தார். **விதவைகளின் ஆதரிப்புச் சங்கம்** ஒன்று ஏற்படுத்தி மிஷன் ஊழியர்களின் விதவைகளுக்குப் பென்ஷன் கொடுத்துவர ஏற்பாடு செய்தார். இவ்விதம் பற்பல நற்செயலகள் புரிந்து வந்த இப்பெரியார் இவ்வுலக வாழ்க்கையை நீத்தபொழுது கண்ணீர்விட்டிரங்காதார் இலர்! இதனின்றும் ரேனியஸ் அவர்கள் தொண்டின் பெருமை தெரியவரும். (தொடரும்)

—திராவிடப்பித்தன்

பேராசிரியர் பேசுகிறார் —

ஏசுநாதர், வள்ளுவர், புத்தர் : எந்தச் சிலையையும் வணங்கியவர்களல்ல.

10

பகுத்தறிவின் வளர்ச்சியே உயிர்நாடியாகக் கொண்டதுதான் மனித வாழ்வு. பகுத்துணரும் பண்பு குன்றினுல் மனித வாழ்வு இற்றுப்போய் விடும். பகுத்தறிவு வளர வளரத்தான் மனிதவாழ்வும் வளருகிறது. இதற்கு தமிழ்நாடே போதுமான சான்ருகும். பண்டைக்கால முதலாக உலகையும் மறந்து வேதாந்தம் பேசிப் பேசித்தான் தமிழகத்தில் புத்துணர்ச்சி வளர இயலவில்லை. விஞ்ஞான வளர்ச்சியையும் மனித முற்போக்கு எண்ணத்தையும் எதிர்க்கும் மனப்போக்கும் தமிழகமார்தருக்கே சிறப்பான போக்காக அமைந்துவிட்டது. எத்தனை எத்தனையோ அறிஞர்கள் தோன்றிப் பகுத்தறிவுப் பிரசாரம் செய்தும் ஏன் தமிழகத்தில் மட்டும் பகுத்தறிவு உணர்ச்சி வளர இயலவில்லை! உலகம் உண்டு, பகுத்தறிவே ஆய்கருள என்பதைத் தமிழகத்தில் மிகக் குறுகிய காலத்தில் பரவிய வேதாந்திகள் அழித்துவிட்டார்கள். இதன் காரணமாகத்தான் தமிழரின் சிந்திக்கும் மனப்போக்கும் குறைபடுகிறது.

தமிழ் நாட்டு மக்களின் ஆலயத் திருப்பணியை எண்ணஎண்ண கல்லூரி முதல்வர் மிகவும் மனம் புண்படுவார். இதுபற்றி அடிக்கடி அவருடன் நான் வாதாடுவதுமுண்டு. பல்லாண்டுகளுக்கு முன்புமனித நாகரீகமே குன்றியிருந்தது. மனித வாழ்வு மிகவும் கரடு முரடானதொன்று. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வேறுபாட்டைக் கற்பிப்பது மிகவும் அரிதானதாக இருந்த காலம் அது; மனிதனே மிருகமாகவும் விலங்கினங்களை ஒவ்வ வாழ்ந்தவனுகவும் இருந்தானும்.

அறிவு பெருகாத அந்தக் காலத்தில் மக்கள் மிகவும் முரடர்களாயிருந்தார்களாம். அச்சமென்பதே சிறிதும் இல்லாத மக்களாகவே அவர்கள் வாழ்ந்தார்களாம்; புலி சிறுத்தை போன்ற கொடிய விலங்கினங்களோடு போரிட்டு வாழ்ந்த வாழ்வுதான் அவர்கள் வாழ்க்கையாம்.

அவர்களுக்கெல்லாம் சிந்திக்கும் எண்ணம் மிகமிகக் குறைவாம். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்கே அறிவாற்றல் சிறிதளவுக்கு பெருகியிருந்ததாம். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே சிந்தனையாளர்களாகத் துலங்க முடிந்ததாம். கரடுமுரடான மனித வாழ்க்கையை சீர்திருத்தம் செய்ய வேண்டிய பெரும்பணியில் ஈடுபட்டார்களாம்; அப்போதெல்லாம் பொதுமேடைகளுக்கு மதிப்பேது! பத்திரிகைப் பலம் இல்லாத காலமது; பத்திரிகைகளும் சுவைமிக்க நூல்களும் கற்றுணராத காலத்தில் அவர்கள் வாழ்ந்தனர். மனித வாழக்கையின் உண்மையை உணர்ந்த அந்த சிந்தனையாளர்கள் ஏனைய மனித உலகையே சீர்திருத்தும் சேவையில் ஈடுபட்டார்கள். எவ்வளவோ வழிகளில் உண்மைகளைப் போதித்தும் உணர்ந்துகொள்ளும் மனேபக்குவம் அவர்களுக்கு குறைவாகவே இருந்தது. சிந்தனையாளர்களின் வாழ்க்கைச் சொற்பொழிவுகளை உணர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு பக்குவமான மனஅமைதியும் சிந்தனையுணர்வும் அவர்களுக்கேது! கானகத்தில் விலங்கோடு விலங்காக வேட்டையாடிப் புசித்த விலங்கினங்களன்றோ அவர்கள்! உடல் பலம் பெற்ற அளவுக்கு உள்ள வளம் பெருதவர்கள் என்றே சுருக்கமாகக் கூறி விடலாம்.

இவர்களிடம்தான் மனித வாழ்க்கையில் அசைக்க முடியாத நம்பிக்கையை மனித விலங்குகளிடையே ஒரு சில சிந்தனையாளர்கள் பாலைவனத்திடையே பசுமைவெளி (ஓயஸிஸ்) களைப்போல சிதறிக்கிடந்தார்கள். மனிதவாழ்க்கையை வித்திட்ட மேதைகளே அவர்கள்தான், காயமே இது பொய்யடா என்று பாடிக்கொண்டு உடலையும் உள்ளத்தையும் நம்பாதே என்று கோணல் புத்தி வேதாந்தம் பேசியவர்களல்ல அவர்கள். உலகை நம்பி உலகில் எப்படியெல்லாம் வாழ்ந்தால் மனித பண்பாடு மிளிர இயலும் என்ற எண்ணம் கொண்ட சீர்திருத்த மேதைகள்தான் அவர்கள்! விலங்குகளாக வாழ்ந்த இனத்தை மனிதர்களாக மாற்றும் இயக்கத் தீரர்கள்தான் அன்று தோன்றியிருக்க வேண்டும்!

மனிதனின் விலங்கினத் தன்மையைப் போக்கி கரடுமுரடான வழியினின்று நன்னெறிப்படுத்த முயன்றார்கள். முதல் முதலில் உள்ளத்தில் அமைதியையும் அடக்க உணர்வையும் வளர்க்கத் திட்டமிட்டார்கள். அடக்கம், அமைதி, அச்சம் இவற்றை மனிதர்களிடையே வளர்த்த பிறகுதான் கண்ணியம் கடமை கட்டுப்பாடு ஆகிய மூன்று மனித நெறியையுமே புகுத்த அவர்களால் முடிந்தது. தான்தோன்றித்தனமாகத் திரிந்த மனித உள்ளத்தில் சிந்தனையாளர்கள் அச்சத்தை வளர்த்த பிறகுதான் அறிவை பெருக்க இயலும் என்று எண்ணியிருந்தார்கள். இடியைக் காட்டி மின்னும் மின்னலைக் காட்டி, பொழியும் மழையைக் காட்டி, காட்டில் பற்றி எரியும் தீயைக் காட்டி, இவற்றையெல்லாம் கடவுள் செயல் என்று கற்பனைக் கதைகளைக் கற்பித்தார்கள். காட்டில் நெருப்பு எரிவதை டையாளு (Diana) என்ற காட்டுக் கடவுள் பற்றிவைத்த அனல் என்றும் கதை கட்டினார்கள்.

பிரம்மாண்டமான ஆலயத்தைக் கட்டினார்கள். கட்டிடக் கலையைப் பெருக்கினார்கள். உள்ளே கற்களை எல்லாம் சிலைகளாகச் செதுக்கி கடவுள். என்று புனைந்துரைத்தார்கள். அனுதினமும் ஆலயம் சென்று ஆண்டவனை வணங்காவிட்டால் இறைவன் கண்ணைப் பறித்து விடுவான் என்று கதையும் கட்டுவித்தார்கள். இவற்றையெல்லாம் அப்போது நம்ப ஆட்களும் ஏராளமாக இருந்தார்கள். கற்களை எல்லாம் கலைகளாக்கி, கதைகளையெல்லாம் கடவுள் என்று கூறிக்கொண்டார்கள். ஆலயத்துக் கற்சிலை அரசன் முதல் ஆண்டிவரை அனைவரையுமே ஆட்டி வைக்கும் தன்மை வாய்ந்தது என்றும் உலகெங்கும் கொள்கைகளைப் பரப்பினார்கள். அறிவு பெருகாத அந்தக் காலத்தில் இந்த உரைகளைக் கேட்க ஆட்கள் நிறைய உண்டு. அனுதினமும் ஆண்டவ தரிசனம் செய்யும் பழக்கத்திலும் ஈடுபட்டார்கள் சிற்றூர், பேரூர்ஆகிய எல்லா ஊர்களிலுமே ஆலய வழிபாடு நடைபெற்றது. அந்தக் காலத்து சீர்திருத்த வாதிகள் கொஞ்சம் மகிழ்ந்தார்கள். விலங்குகளாக வாழ்ந்த மக்கள் இறைவழிக்கு வருவதை கண்டு கொஞ்சம் அகம் மகிழ்ந்தார்கள். ஆண்டவன் பெயரால் அந்தக் காலத்து அறிவாளிகள் எதைச் சொன்னலும் நம்பினார்கள்.

காலஞ் சுழன்று கொண்டே வந்தது. விலங்கினம் ஆண்டவனை நம்பும் இனமாக மாறியது. தனக்கு மேல் சக்தி வாய்ந்த ஒருவன் இருக்கிருன் என்ற நம்பிக்கை மக்களுக்கும் பிறந்தது. அந்தக் காலத்து சிந்தனைச் சிற்பிகள் விரும்பிய மனஅடக்கமும் சிந்தனையுணர்வும் பெரிதும் மக்களிடம் பரவியது. மகிழ்ந்தார்கள்.

மக்களிடையே மன அடக்கத்தையும் சிந்தனையுணர்வையும் ஊட்டிய பிறகே சிந்தனையாளர்கள் கண்ணிய வாழ்வு, கட்டுப்பாடான நெறி, கடமை உள்ளம் ஆகிய பண்புகளை வளர்க்கத் தலைப்பட்டார்கள். ஏசுநாதரும் திருவள்ளுவரும் புத்தரும் இப்படிப்பட்ட ஞானிகள்தான். உலகை நம்பி மக்களைத் திருத்தி நல்வழிப்பட விரும்பிய மேதைகள்தான் இவர்கள். இவர்கள் சென்ற வழியில் குறைபாடு ஏதும் இல்லை மக்கள் கூட்டம் இவர்கள் வழியைப் பெரிதும் ஆதரித்துப் பின் தொடர்ந்தது.

முன்னைவிட காலம் அதிவிரைவாகச் சுழன்றது. உண்மை நெறியைப் போதிக்கும் துறைகளுக்கு மக்களின் அமோக ஆதரவு உள்ளதை உணர்ந்தனர். குறிப்பிட்ட இனத்தாரும் குறிப்பிட்ட மனப்போக்கு கொணடவர்களும் மக்களின் உண்மை நெறியின் ஆதரவைச் சுயதேவையின் பூர்த்திக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டார்கள். உண்மையாகவே ஏசுநாதரும் புத்தரும் வள்ளுவரும் எந்த சிலையையும் வணங்கியவர்களல்ல. எந்த ஆலயத்திலும் உள்ள ஆண்டவனை வணங்கியவர்களுமல்ல. ஆலயம் என்ற மண்டபத்தில் அறிவை வளர்க்க முயன்ற உத்தமர்கள்தான் இவர்கள்.

இல்லறத் தொல்லைக்கு இடையே தன் மனித உலகு பற்றிய சிந்தனைக்கு தொல்லை விளையுமோ என்று அஞ்சிதான் புத்தன் காவியுடுத்திக் கானகம் சென்ருன், உலகில் மக்கள் நெறியாக வாழ சில ஒழுங்கு முறைகளை உணர்ந்தான். மக்களிடையே பரப்பினுன், மக்கள் உணர்ந்தார்கள்.

மக்கள் விலங்கினங்களினின்று மிகவும் முன்னேறிவிட்டதை புத்தன் உணர்ந்தான். ஆலயத்துக் கல்லைக்காட்டி ஆண்டவன், அடிபணி என்று ஏமாற்றி மனிதனிடம் கட்டுப்பாட்டை வளர்க்க வேண்டியது அவசியமில்லை என்பதை உணர்ந்தான். ஆலயத்து ஆண்டவனுக்காக மூகஸ்துதி பாடிவிட்டு வீடு வந்தவுடன் பழைய முரட்டுத்தனமான செயல்களில் ஈடுபடுவதை கண்டிக்க விரும்பினுன். உலகில் ஒன்றித்து தூய்மையாக வாழ எட்டு உண்மை (Eight bold path) களை இயம்பினுன். அனைத்தும் நேர்மையின் அடிப்படையில் பிறந்தவைகள். புத்தன் தன் காலத்தில் மக்களிடையே சிந்தித்துணர்ந்து நல்லதையும் அல்லதையும் பாகுபடுத்தி மனிதன் வல்லவனுக வாழ வேண்டிய உண்மையை நிலைநாட்டினுன். அவன் காலத்தில் ஒருபெரும் கூட்டத்தையே ஒழுங்கு முறையில் இயங்கும் சிந்தனையாளர்களாக மாற்றியமைத்தான் அந்தோ! அவன் காலத்துக்குப் பின் அவன் தோற்றுவித்த இலட்சியக் கோட்டை சரிந்து விழ்ந்து அழிந்து பட்டுவிட்டதே! அவன் இயம்பிச் சென்ற ஒழுங்கு முறையோடு கூடிய நல்லுணர்ச்சியை மறந்துவிட்டு அவனுக்கே சிலை எழுப்பிக்கும் மூடப் பழக்கம் பரவ ஆரம்பித்தது. மக்கள் புத்தர் நெறி பாதையினின்றுநீங்கி வெறிப்பாதையைத் தொடர்ந்தார்கள். இதற்குத்தான புத்தமதம்?

பண்டைத் தமிழகத்தில் கபாளய மதம் பரவியிருந்தது. காளியை வழிபட்ட அம்மதத்தினர் ஆண்டவனுக்கு மனிதனையே பலியிட்டு வந்தார்கள். அப்படிப் பலியிடுவதில் ஆண்டவனை திருப்திப் படுத்திவிடலாம் என்றும் மூடத்தனமாக நம்பினர். அவர்களைப்பார்த்து சைவ வைணவர்கள் நையாண்டி செய்து கைகொட்டிச் சிரித்தார்கள். "ஆண்டவன் படைத்ததுதானே மனிதன். ஆண்டவன் படைத்த மனிதனை. ஆண்டவனே பலியிடக் கேட்பானு! ஆண்டவன் இதை விரும்பமாட்டான், கபாளயர் செய்வது கண்ணியமில்லாத போக்கு" என்றெல்லாம் சைவ வைணவர்கள் கண்டித்தார்கள். உண்மையாகவே இது மெச்சத் தகுந்த போக்கு. இப்படிக் கண்டித்த வைணவர்கள் அப்போதே அறிவாளிகளாகத்தான் இருக்க வேண்டும். ஆனல் இப்போது தோன்றியுள்ள அறிவாளிகள் கேட்கும் கேள்விகட்கும் அவர்கள் பதிலளித்தேயாகவேண்டும். ஆண்டவன் மனிதனை மட்டுமா படைத்தான், தேங்காய், பழம், திருநீறு, குடம், ஊதுபத்தி ஆகிய அத்தனையும்தான்படைத்தான் ஆண்டவன்தானே இவற்றையெல்லாம் படைத்தவன், இவற்றை மனிதனின் நல்வாழ்வுக்குத்தானே படைத்தான். அப்படிப் படைத்த இவற்றை ஆண்டவனே விரும்புவானு என்று கேட்கும் சீர்திருத்தக்காரர்களை ஏனே சைவ வைணவர்கள் நாத்திகர்கள் என்று கூறவேண்டும்! தேங்காய் பழம் ஆகிய இவற்றைப் பெற்றுக் கொண்டு ஆண்டவன் மக்கள் இடும்பைப் போக்குவதனுல் ஆண்டவன் மிகவும் கீழானவன் என்றல்லவா எண்ணப்படக் கூடியவன். தேர்வில் மோசமாக எழுதியுள்ள மாணவனிடம் தனிப்பட்ட முறையில் பணம் பெற்று அதிகமார்க்குகள் போட்டு வெற்றி பெறச் செய்யும் ஆசிரியருக்கும் தேங்காய் பழம் வாங்கிக் கொண்டு ஏற்ற உதவியைச் செய்யும் கடவுளுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடுகிறதே என்பதை எண்ணும்போதுதான் வருந்துகிறேன்.

ஏசுநாதரும் கூட உண்மையான அன்புவழியில் தான் நடந்தொழுக வேண்டிச் சென்ருர். ஆனல் காலவெள்ளத்தில் அவர் பெயரால் பரவிவரும் மதத்துறையில் எத்தனை இடங்களில் நேர்மை குறைவதைக் காண்கிறோம். எவ்வளவுதான் நேர்மையைக் கடந்து சென்ருலும் எல்லாம் இறைவன் செயல் என்று கூறி மக்களை சமாதானப்படுத்தவும் இயல்கிறது. பண ஆசையை ஒழித்து பண்பட்ட உள்ள உணர்வைக் வளர்க்கக் கூறிச்சென்ருராம் அவர் கூறிய உண்மை வெகு அழகான உண்மைதான், அவர் பெயரால்தான் பாவமன்னிப்புச் சீட்டும் நாடெங்கும் விற்பனையாயிற்று.

காலம் மாறியது! நல்லவன் பெயரைக் கூறிக் கொண்டு பொல்லாதவர்களும் மதப் போர்வையில் நீண்ட வாழ்க்கை வாழமுடிந்தது. அந்தோ! இந்த அநியாயங்களை வளர்க்கத்தானு சிந்தனையாளர்கள் தோன்றினார்கள்! திருவள்ளுவரும் கூட மக்களிடையே உண்மை நெறியை பரப்பத்தான் பாடுபட்டு மறை ஒன்று எழுதித் தந்தார். காலவெள்ளத்தில் எத்தனை இடைச் செருகல்! வைணவன் திருநாமம் போட்டும், சைவன் திருநீறு போட்டும் வள்ளுவனை அழகு பார்த்தானேயன்றி உண்மையான வள்ளுவத்தை உணர்ந்து அதன் வழியில் நடந்தானு! வள்ளுவ நெறியில் வாழாதவனும் வள்ளுவன் தன் மதத்தான் என்று கூறிப் பெருமை கொள்ளும் இழிநிலையும் வளர்கிறது! இப்படிப்பட்ட கண்மூடி எண்ணமும் மூடப் பழக்கமும் வளரும்போது மக்களிடையே பகுத்தறிவு பர்வுவது எங்ஙனமோ!

(தொடரும்)

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

செய்திகள்

பம்பாய்

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு பிரதிநிதிகளின் கூட்டம் 15—5—55 காலை 10-மணிக்கு தாந்தவல்லி தி. மு. க. அலுவலகத்தில் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. துணைச் செயலாளர் யோ தர்மராசன் கடந்த கூட்ட நிகழ்ச்சிகளையும், வரவு—செலவு கணக்குகளையும் வாசித்துக் காண்பித்தார். மூன்று மாத வரவு—செலவு கணக்குகளையும் கழக உறுப்பினர்கள் விவரங்களையும் அனுப்பித் தராத கிளைகள் உடனடியாக அனுப்பித் தரவேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

அமைப்புச் செயலாளராக தோழர் த. மு. பொற்கோ, பிரச்சார செயலாளராக தோழர் எஸ். இராசன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பம்பாய் தி. மு கழகம் (தலைமை நிலையம்) இயங்க நிரந்தர செலவுகட்காக ஒவ்வொரு கிளைக் கழகமும் மாதம் ரூ. 2-ம் தாராவி கிளை ரூ. 4. அனுப்பிக் கொடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

மாநில மாநாட்டிற்கான நிதி வசூலிக்கும் பிரச்னை யோசிக்கப்பட்டு ஒவ்வொரு கிளையும் தங்களால் இயன்ற அளவிற்கு நிதி வசூலித்து ப. தி. மு. க. பொதுச்செயலாளர் அவர்களுக்கு அனுப்பித்தர வேண்டும் என தீர்மானிக்கப் பட்டது. குளிர்பானங்கள் இனிப்புப் பண்டங்கள் முதலியன காந்தவல்லி தி. மு. க. வினராலும் தோழர் த மு. பொற்கோ அவர்களாலும் வழங்கப் பட்டன. இக்கூட்டத்திற்கு பொதுக் குழுப் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டமைக்கு நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

*

கொலாபா (கிளை)

23—5—55 இரவு 9 மணிக்கு கூப்ரேஜ் திடலில் கொலாபா [கிளை] திராவிட முன்னேற்றக் கழக சொற்பயிற்சி மன்றத்தின் சார்பாக சிறப்பு சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது,

கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்களையும் கழகத் தோழர்களையும் தோழர் க. சு. செகநாதன் வரவேற்று மன்றத்தின் செயலாளரான தோழர் எஸ். பி பெருமாளை கூட்டத்திற்கு தலைமை தாங்கி தருமாறு முன்மொழிந்தார்,

பின்னர் தலைவர் முன்னுரையில் கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றியும், தி. மு. க.வின் பணி குறித்தும் உரையாற்றினர்,

அடுத்து தோழர்களான க. சு. ஏசுநாதன், கே. கே. இராமநாதன், ஏ. எஸ். தாஸ், முறையே நாம் வளர்ந்த விதம், மறுமலர்ச்சி, ஒற்றுமை என்ற தலைப்புக்களில் சொற்பெருக்காற்றினர். இறுதியாக தோழர்களான தாறு இரா. சண்முகராசன், சு. தங்கவேலன் ஆகியோர் தி. மு. க. வின் கொள்கைகளை விளக்கியும் தற்கால அரசியல் நிலை குறித்தும் சிறப்புரையாற்றினர்கள்.

*

அந்தேரி

29–5–55 ஞாயிறு காலை 9–மணிக்கு மார்வாடிச் சால் மாங்தோப்பில் செயலாளர் எல். எம். பாண்டியன் தலைமையில் தி.மு.க.உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் துணைச்செயலாளர் தோழர் ஈ. முத்தையா கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார். பின்னர் தோழர்கள் எஸ். கணேசன், எஸ். முத்து இருவரும் ஜூன் மாதம் நடக்கவிருக்கும் மாநில மாநாட்டுக்கு பணம் அனுப்புவதுபற்றி பேசினர். பின்னர் (கழகச் சட்டம் 92 வது ஷரத்துப்படி) ஐந்து கூட்டங்களுக்கு வராத தோழர்கள் எ. இ. கே. லத்தீப், எ. இ கே இஸ்மாயில், அப்துல் ஹமீது ஆகிய மூன்று தோழர்களையும் செயற்குழுவிலிருந்து விலககப்பட்டு அந்த இடத்திற்கு தோழர்கள் வி சுப்பையா, எ. என். நாயர், எ கிரேபன் ஆகிய மூன்று தோழர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

பின்னர் கழகச் சார்பில் ஒரு தினத் தாள் வரவழைக்கவும் முடிவு செய்யப் பட்டது. இறுதியாக தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச்செயலாளர் ஈ முத்தையா நன்றி நவில பகல் 10–30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

கம்பம்

27—5—55-ந் தேதி கம்பம் கார்த்திமதி நிலையத்தில் தி மு க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இரவு 10 மணிக்கு பாலகிருட்டிணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது, கூட்டத்திற்கு 19 உறுப்பினர்களில் 13 பேர் வந்திருந்தனர். அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

8—5–55-ந் தேதி திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற மதுரை மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டத்தில், தேனி தாலுகா பகுதியிலுள்ள பீர்மேடு மூணார், தேவிகுளம் முதலிய பகுதிகள் முதலாவது மாநில மாநாட்டு தீர்மானப்படி நாஞ்சில் மாவட்டத்துடன் தான் இணைந்திருக்கல் வேண்டும் என்றும் வண்டிப்பெரியாரிலிருந்து மதுரை மாவட்டத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக்குழு உறுப்பினருக்கு பதில் வேறொரு நபரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது,

ஆனால் கம்பம் தி.மு.க. கிளை பீர்மேடு மூணர், தேவிகுளம் பகுதிகள் முறையே மதுரை கோயம்புத்தூர் மாவட்டங்களுடன் இணைந்திருக்கலை விரும்புகிறது. காரணம் இந்தப் பகுதிகள் தூரமாயுள்ள நாஞ்சில் மாவட்டத்துடன் இணைந்திருந்தால், மாவட்டக் கழகத்தின் நேரடித் தொடர்பில்லாமல் நல்ல முறையில் வளர்ச்சியடையாது மேலும் அந்தப் பகுதி மாவட்டப் பிரதிநிதிகளுக்கு போக்குவரத்தில் வீண்செலவும் சிரமமும் ஏற்படும். அதேசமயத்தில் பீர்மேடு, மூணர் பகுதிகள் மதுரை கோவை மாவட்டங்களுடன் இணைந்திருந்தால் மாவட்டக் கழகத்தின் நேரடித் தொடர்பு கிடைப்பதுடன் அப்பகுதிகளில் மேலும் பல கிளைகளை ஏற்படுத்தி நம் இயக்க கருத்துகளை பரப்பலாம். மாவட்டப் பிரதிநிதிகளுக்கும் வீண் போக்குவரத்து செலவும் பிரயாண காலமும் குறையும். ஆகவே பீர்மேடு, மூணர், தேவிகுளம்பகுதிகளை முறையே மதுரை, கோவை மாவட்டங்களுடன்தான் இணைக்கவேண்டுமென்று கம்பம் தி. மு. க. சாலவும் விரும்புகிறது.

துணைச் செயலாளர் பி. சாகுல்அமீது நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது. இத்தீர்மானத்தை பொதுச் செயலாளர் அவர்கட்கும் மதுரை மாவட்டச் செயலாளர் அவர்கட்கும் அனுப்பப் பட்டுள்ளது.

திருச்சி—சிந்தாமணி தி. மு. க.

29–5–55 ஞாயிறு காலை 10 மணிக்கு சிந்தாமணி திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் கூட்டம் கழகக் கட்டிடத்தில் திருச்சி மாவட்ட துணைச் செயலாளர் ஜி. பராங்குசம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் படிப்பகம் நூல் நிலையம் இவற்றின் விதிகளும் சட்டதிட்டங்களும் முடிவு செய்யப்பட்டன. மாநில மாநாட்டு நிதிக்கு சிந்தாமணி கிளை செலுத்த வேண்டிய பங்கை ஜூன் திங்கள் 12-ம் தேதிக்குள் நகர கழகச் செயலாளரிடம் கொடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. கழக துணைச் செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிந்தது.

பெத்துநாயகன்பேட்டை

26—5—55 வியாழனன்று மாலை 7 மணிக்கு திருவள்ளுவர் முன்னணிக் கழக உறுப்பினர்கள் கூட்டம் சிவஞானம் பூங்காவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்னாள் செயலாளர் தோழர் த. கோ. அழகன்பன் தலைமை தாங்கினர். அதுசமயம் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள். கழக எதிர்கால வளர்ச்சி, நமது வட்டத்தில் சுகாதாரத்தைகவனித்தல் கழக நூல்வளர்ச்சிக்காக நன்கொடை வசூலித்தல், கழகத்திர் கல்வி போதித்தல். செயலாளர் க. இளங்கோவன் நன்றிகூற இரவு 9-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

சென்னை 12-வது வட்ட தி. மு, க.

10—5—55-ல் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நிகழ்ந்தபோது நிறைவேறிய தீர்மானங்களும் வரவு செலவு கணக்கும்.

கழகத்திற்கென தனி இல்லம் கழக மாதசந்தா இவைகளை ஆலோசிக்கப் பட்டு முடிவு செய்யப்பட்டது.

வரவு செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

கழகப் பொதுச் செயலாளராயிருந்து பணியாற்றிய அறிஞர் அண்ணா அவர்களுக்கும் புதிய பொதுச்செயலாளராய் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் இக்கமிட்டி பாராட்டுதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

சென்ற ஆண்டு கழகச் செயலாளராக இருந்து பணியாற்றிய தோழர் மு. சண்முகம், பி. எம். யூசப், பொருளாளர், மாவட்ட உறுப்பினர், நிர்வாக உறுப்பினர் அனைவருக்கும் இக்கமிட்டி நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறது,

சென்னை மாவட்டத்தின் முன்னாள் செயலாளர் கே. எம். கண்ணபிரான், துணைச்செயலாளர், வி. ராமசாமி பொருளாளர் எ. கண்ணப்பன் ஆகியோர்களுக்கு சிறப்பான முறையில் தேனீர் விருந்துடன்பாராட்டு நடத்துவது என இக்கமிட்டி தீர்மானிக்கிறது,

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்களை இக்கமிட்டி பாராட்டுகிறது.

*

இக்கிளைக் கழகம் எண் 16, நாராயணப் நாய்க்கன் தெரு சென்னை–1 க்கு மாற்றப்படடு 15—5—55 மாலை தோழர் அங்கப்பன் அவர்களால் கொடியேற்றுவிக்கப்பட்டு தோழர்கள் முத்து ஏகாம்பரம், பி, வி, இராமன், ஜு. கண்ணப்பன் முறையே கழகமும் கடமையும் என்ற பொருளில் பேசிய பின்னர் தேநீர் வழங்கப்பட்டு இனிதே முடிவுற்றது.

கீழப்பூங்குடி

24—5—55 அன்று இராமு செங்குட்டுவன் தலைமையில் கீழப்பூங்குடி தி.மு. கழகத்தின் நான்காம்ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெரி கணேசன் ஆண்டு அறிக்கை வாசித்த பின்னர் திருச்சி டி. கே. சீனிவாசன் கழகக் கொடி யேற்றி வைத்து சமுதாய இழிநிலை குறித்து நீண்டதோர் உரையாற்றினர்.

கலையம்புத்தூர்

22-5-55 ஞாயிறு மாலை கலையம்புத்தூர் அண்ணா திடலில் தோழர் வே. சக்திவேந்திரன் தலைமையில் மேதின விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. அருப்புக்கோட்டை எம். எஸ் இராமசாமி மேதின விழாவின் சிறப்புப் பற்றியும் திராவிட நாடு ஏன் பிரியவேண்டும் என்பதன் அவசியத்தை விளக்கியும் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

தமிழ் இளைஞர் கழகம் வண்ணையம்பதி,

கழக உறுப்பினரும் ஆதரவாளருமான கருணாநிதி என வழங்கும் வை. அண்ணாமலை அவர்கள் 23—5—55 திங்களன்று சென்னையில் இயற்கை யெய்தியதை முன்னிட்டுகழகம் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

*

முல்லை-சத்திக்கு வரவேற்பு

சென்ற 30—5—55 அன்று, தென்னூர் (வ. ஆ மாவட்டம்) பஞ்சாயத்து போர்டின் சார்பில், வடஆர்க்காடு மாவட்ட தி மு க. செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்களுக்கு ஒருவரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்கு பதிலளித்து தோழர் சத்தி அவர்கள் பேசுகையில் "எதிர்த்து வரும் இன்னல்களையும் அல்லல்களையும் துச்சமெனமதித்து பொதுவாழ்வில் இறங்கிவிட்ட என்னைப் போன்ற இளைஞர்களுக்கு இத்தகைய வரவேற்புகள் மேலும் மேலும் உணர்ச்சியூட்டும் கருவிகளாக—அமைகின்றன; மகிழ்கிறேன். கிராமங்களின் அபிவிருத்திக்கும் சீர்திருத்தத்திற்கும் பாடுபட வேண்டிய கிராம பஞ்சாயத்துக்கள், கட்சிப் பூசல்களுக்கிடையே சிக்கிவிடாமல் கடமையாற்ற விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்,

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

வரலாற்றுச் சித்திரம்

விஞ்ஞானத் தந்தை அரிஸ்டாட்டல்

கௌதமன்

சென்ற இதழ் தொடர்ச்சி

இந்த நன்கொடையின் உதவியாலும், தன்னைக் கற்றுத் தெளிந்தவனுக்குதவ முன்வந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களாலுந்தான், தனது விஞ்ஞான ஆராய்ச்சியை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டே போனான் அரிஸ்டாட்டல்! ஆனால் இந்த நேரத்திலேதான் பிளேட்டோவும் மாண்டு விட்டான்! எனவே அரிஸ்டாட்டலுக்குப் பல்கலைக் கழகத்தின் தலைமைப் பதவியும் இப்போது கிடைக்கலாயிற்று! இதைப் பயன்படுத்தித்தான், மேலுந்தனது அறிவாராய்ச்சியை இங்கே துவக்கினான் அரிஸ்டாட்டல்.

இந்த அரிய இயற்கையாராய்ச்சியின் பயனாகத்தான், இன்னும் அரிஸ்டாட்டல் விஞ்ஞானத்தின் தந்தையென்று அழைக்கப்படுகிறான்! பொருள்களுக்கும் உயிர்களுக்கும், சில நிலையான 'செயல் முறைகள்' உண்டென்று கண்டறிந்து அதை ஒழுங்காக முதன் முதல் உலகினருக்கு அறிவித்தவன் அரிஸ்டாட்டலைத் தவிர வேறெவருமில்லை!

அந்த அளவுக்கு, பொருள்களின் நுணுக்கத்தையும், உயிர்களின் நுணுக்கத்தையும் ஒருவரையறைக்குட்படுத்தினான் அரிஸ்டாட்டலென்றால், அவனின் தெளிந்த மதி எந்த அளவுக்குப் போற்றப்பட வேண்டிய ஒன்று என்று எண்ணிப் பாருங்கள்! தன் வாழ்நாளையே அர்ப்பணித்து; அவன் கற்றறிந்து; ஆய்ந்து தெளிந்த சேதிகள் உள்ளபடியே நம்மை வியக்க வைக்கத்தான் செய்யும்!

சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிராணிகள், பறவைகள், தாவர வகைகள், மீனினங்கள் ஆகியவற்றின் வாழ்க்கையின் இரகசியத்தை நன்கு அறிவான் அரிஸ்டாட்டல்! எப்படிப் பிராணிகள் பறக்கின்றன! எங்ஙனம் விலங்குகள் இடங்குகின்றன! எப்படிச் செடி கொடிகள் வளருகின்றன? பறவைகளின் உடலமைப்பு எப்படி! மிருகங்களின் உடற்பொருத்தம் எப்படி! என்பதை அவன் கண்டறிந்திருக்கிறான்! பறவைகளின் உடற்கூறுகளை அறுத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுவதிலே அவனுக்கு ஒரு தனி ஆனந்தம்! முட்டைகளை உடைத்து கருக்கள் வளருகின்ற விதம் கண்டறிவதிலே அவனுக்கு ஒரு தனி மகிழ்ச்சி! இயற்கை தத்துவத்தின்படி பொருள்கள் அமைக்கப்பட்டிருப்பதன் விநோதம் கண்டறிந்து கொள்ளுவதிலும், உயிருள்ள ஜீவன்கள் எப்படி சுவாசிக்கின்றன! எப்படி வளருகின்றன! எப்படிக் காதலிக்கின்றன? எங்ஙனம் இனவிருத்தி செய்கின்றன? எங்ஙனம் சாகின்றன? என்பதையெல்லாம் கண்கூடாகக் கண்டறிவதிலேயும் அவனுக்கிருந்த ஆர்வம் சொல்லி முடியாது!

விசியேறிகின்ற விதை, முளைக்கின்ற விதமும்முளைக்கும்சாதனமும் முறையும் வளர்ந்து பரவும் விதமும், அவன் சிந்தைக்கு விருந்தளிக்கும் காட்சியாக ஆகியிருக்கிறது பல நேரங்களிலே, நீரிலே வாழுகின்ற மீனினங்களைப் பிடித்து அதன் அமைப்புகளை நன்கு பரிசீலித்துப் பார்த்து பல புதிய உண்மைகளை கண்டறிந்து கொள்வதிலே அவனுக்கிருந்த தனி முயற்சி உள்ளபடியே பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

இங்ஙனம் இயற்கையாக உயிர்வாழும் பொருள்கள் அனைத்திற்கும் ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றுவதின் மூலம் அதனதன் செயல் முறைகளை முதன்முதல் ஒழுங்குபடுத்திச் சொன்னவன் அரிஸ்டாட்டல்தான்! அதுமட்டுமல்ல; இத்தகைய இயற்கைத் தத்துவ ஆராய்ச்சி (Natural Philosophy or Science) முறைக்கே இவன்தான் தந்தையும் ஸ்தாபகனும் (Father of Natural Science) ஆவான் என்பதை விஞ்ஞான உலகம் என்றுமேமறக்காது!

அவன் வாழ்நாளின் இறுதிக் காலத்தை தனது மற்ற இரு ஆசிரிய பரம்பரையினரைப்போலவே— தத்துவார்த்தம் பேசுவதிலேதான் பயன்படுத்தினான் அரிஸ்டாட்டல்! துவக்கத்திலே வைத்தியம், பிறகு கலைத் தேர்வு இடையிலே விஞ்ஞான ஆராய்ச்சி, இறுதியாக தத்துவார்த்தம் இப்படித்தான் கழிந்தது அவன் வாழ்வு! இவனின் வாழ்நாள் பூராவிற்கும் இவனுக்குப் பெருமை தேடித்தரக் கிடைத்த ஒரே சாதனம் இவனின் கலைக் கழகம்தான்! இந்த கலைக் கழகத்தால் இவன் தரம் உயர்ந்தது மட்டுமல்ல; இவனின்புகழ் தழைத்தோங்கியது மாத்திரமல்ல உலகிற்கே விஞ்ஞானத்தைப் பற்றியதோர் பொதுவான அறிவையும், தனித்ததோர் இயற்கை அனுபவத்தையும்கூட அதால் தேடித்தரவும் முடிந்தது. கலைக் கழகத்திலே அரிஸ்டாட்டலின் பயிற்சிக் குறிப்புகள், சொற்பொழிவுகள், தத்துவார்த்தமான பரிட்சை முறைகள் ஆகிய இவைகள்தான் பாடதிட்டமாக அமைந்தன! இவ்வளவு பாட திட்டங்களும் இவனின் ஆராய்ச்சியால் உதிர்ந்த மலர்கள்தான் என்றாலும், மிகையல்ல அது. இவன் போதித்த பாடங்கள் எல்லாமே நீண்ட சொற்பொழிவை உள்ளடக்கியதாகவும், சிலபல ஆண்டுகள் வரைத் தெளிவாக ஊன்றி கற்போருக்கு மட்டுமே புரியும் அளவினதாகவும் கடினத் தன்மையுடையனவாகவுமே யிருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது!

கலைக்கழகத்திலே நடந்த தர்க்க விசாரணைகள் அத்தனையும் பல்வேறுபட்ட பொருள்களின் மீதேயாகும் ஒருநாள் தர்க்கம் (Logics) அமையவேண்டிய விதம்பற்றி விவாதம் நடக்கும். மற்றொரு நாள் நீதிநூல்கள் (Ethics) எப்படி யிருக்க வேண்டுமென்பதைப் பற்றிய தெளிவாராய்ச்சி நிகழும்! பிறிதொருநாள் வைத்தியம் (Physical) பற்றிய போதனைகள் நடைபெறும்! வேறொருநாள் பூதத்துவத்தை (Biological) பற்றிய சோதனைகள் நடைபெறும் மற்றொருநாள் கடல் மீன்களை பற்றிய ஆராய்ச்சி தொடரும்! இப்படித்தான் அங்கே பொறுளக்குண்டான உண்மைத் தத்துவங்கள் கண்டெடுக்கப்பட்டன! இத்தகைய கருத்துக் கருவூலங்களின் தொகுப்புதான் இன்றைய விஞ்ஞானம். அந்த நேரத்திலே அரிஸ்டாட்டலின் தத்துவங்களும் பயிற்சிகளும் சற்று கடுமையானதாகவே யிருந்தாலும், அவன் கண்டெடுத்த அவ்வளவு தத்துவங்களை யொட்டியும்— அதன் மீதும்—கட்டப்பட்டதுதான் இன்றைய விஞ்ஞானம் என்றால் மிகையல்ல அது! எனவேதான் அரிஸ்டாட்டலை 'விஞ்ஞானத்தின் தந்தை' (Father of Natural Philosophy) என்றழைக்கிறார்கள். ஒரு தனிமனிதன் விஞ்ஞான ஆராய்ச்சிக்கென அளித்த காணிக்கைக்கும் நிறையுமுட்பிற்கும். அரிஸ்டாட்டலே பெரிதும் உதாரணமாக நிற்கிறான். இவனைத்தவிர வேறெவரும் தனிப்பட்ட முறையில் இத்தகைய மேன்மையான ஆராய்ச்சியில் இவ்வளவு அதிகமான அளவுக்கு உழைத்ததாகவே தெரியவில்லை.

விஞ்ஞானத்தைப்போல அரிஸ்டாட்டலுக்கு மற்ற பொருள்களின் மீதும், ஆர்வமிருந்ததை நம்மாலே மறந்துவிட முடியாது. அரசியல்—சரித்திரம்—தர்க்கம்—வைத்தியம்— நீதி — தத்துவஞானம்—ஆகிய இவைகளைப் பற்றியும், கலைக்கழகத்திலே அரிஸ்டாட்டல் ஆய்ந்து தெளிந்து பலநூல்களையும் வரைந்துள்ளானென்றால் உள்ளபடியே அது பெருமைக்குரிய நற்செய்திதான்! இதைத்தவிர நல்லதோர் வசனகர்த்தாவாகவும் அவனிருந்திருப்பது மிகவும் பாராட்டற்குரியதாகும்!

மேலும் அலெக்சாண்டரின் பேருதவி அவனின் ஆராய்ச்சிகளை உயிருள்ளதாகவும் ஆக்கியது! அலெக்சாண்டரும் தாலமி யென்ற அவனின் அருமைத் தளபதியும், தமது குருவான அரிஸ்டாட்டலை முறையே ஆதரித்தும் பரப்பவும் செய்தார்கள்! அலெக்சாண்டர் கி. மு. 332-ல் எகிப்திய மண்டலத்தை வெற்றி கொண்டபோது தன் பெயராலே ஒரு நகரை அங்கு நிர்மாணித்தான் அந்த நகர்தான் இன்றும் சிறப்பும் பொலிவும் ஒளியும் பெற்று விளங்கும் அலெக்சாண்டிரியாவாகும். அலெக்சாண்டர் கி. மு. 323 பாபிலோனில் கடும் ஜுரத்தால் மாண்டபோது தாலமி என்ற அவன் தளபதி எகிப்தை ஆளும் பொறுப்பேற்றான். இதன் பயனாய் தனது அன்பு மன்னன் பெயரால் நிறுவப்பட்ட அலெக்சாண்டிரியா எகிப்தின் தலைநகராயிற்று, தாலமி அங்கே கிரேக்க கலாச்சாரம் பரப்ப நினைத்த போது, புதியதோர் கலைக்கூடமும், அறிவாராய்ச்சிக் கழகமும் அங்கே ஏற்படலாயிற்று. அப்படி ஏற்பட்ட அறிவாராய்ச்சிக் கழகத்திலே அரிஸ்டாட்டலின் கொள்கைகளும் தத்துவங்களும் விஞ்ஞானகருத்துரைகளுமே மையமாக இடம் பெறலாயிற்று. அவ்வளவுக்கும் மன்னன் தாலமி வழிவகை செய்தான்.

அரிஸ்டாட்டல் கி. மு. 322-ல் இறந்தபிறகு அவனின் கொள்கைகளும் அவன் விட்டுச் சென்ற ஆராய்ச்சியும் ஏதென்ஸில் தொடர்ந்து அந்தக் கலைக்கூடத்தில் நடைபெற்றதென்றாலும் சிலபல காலந்தான் அதுவும் சிறப்புற நடைபெற்றது. அரிஸ்டாட்டலுக்குப் பிறகு ஏதென்ஸின் கலைக்கூடத்திற்குத் தலைவனாக வந்த 'தியோபிரேஸ்டஸ்' (Theophrastus-கி மு. 380-287) என்பவன் அரிஸ்டாட்டலை ஒத்திருந்தாயினும் அவனுக்குப் பிறகு கலைக்கூட ஆராய்ச்சியும் சரிதமும் மங்கிய அளவுக்கு வந்து விட்டது. ஏதென்ஸின் கலைக்கூடம் பிளேட்டோவால் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சுமார் 900 ஆண்டுகள் (கி மு. 300—கி. பி. 529) வரை நடைபெற்றிருக்கிற தென்றாலும் பிற்காலத்தில் அது பொலிவிழந்ததாகவே ஆகிவிட்டது இதற்குக் காரணம் அலெக்சாண்டிரியாவில் 'தாலமிக்களால்' தோற்றுவிக்கப்பட்ட அறிவுக் கழகங்கள்தான்! பிற்காலத்து அலெக்சாண்டிரியாதான் கிரேக்க கலாசாரத்தையும், அரிஸ்டாட்டலின் பெருமையையும் அதிகமாகப் பிரதிபலிக்கத் தொடங்கியது, இதன் பயனாய்தான் அரிஸ்டாட்டல் விஞ்ஞானத் தந்தையாகி இன்னும் பொன்னுப் புகழுடன் வரலாற்று ஏடுகளிலே இடம் பெற்றவனாக இருக்கிறான்! சாக்ரடீசுக்கும் பிளேட்டோவுக்கும் இருக்கும் முக்கியத்துவத்தில் எதனையும் இழக்காத பெருந்தகையாகவும் விஞ்ஞான மேதையாகவும் அவனிருந்து வருகிறான்.

அத்தகைய ஒருவனை ஈன்றெடுத்த கிரேக்க மண்டலத்தையும் அவன் கற்றுத் தெளிந்த ஏதென்ஸையும் அவனை இந்தத் துறைக்கு ஈர்த்து வந்து அவனுக்கு அறிவளித்த பிளேட்டோவையும் நாம் என்றென்றும் மறக்க முடியாதிருப்பதைப் போலவே அவனை பிற்காலத்தில் நன்கு பிரதிபலித்த எகிப்திய புகழ் நகரம் அலெக்சாண்டிரியாவையும் அதை நிர்மாணித்த தாலமிக்களையும் நம்மாலே மறக்க முடியாது! எனவே நமது அடுத்த கட்டுரையில் அலெக்சாண்டிரியாவின் அறிவாராய்ச்சிக் கழகங்கள் தோன்றி வளர்ந்து புரிந்த செயல்களைப்பற்றி நாம் சிறிது தெரிந்து கொள்ளலாமென்று எண்ணுகிறேன்,

முத்தமிழ் நாடக மன்றம்

25—5—55-ல் பழைய பூவிருந்தவல்லியில் முத்தமிழ் நாடக மன்றம் நிறுவப்பட்டது. மன்றத்தின்செயலாளராக பெ. பெருமாள் அவர்களும் பொருளாளராக க, விசயரங்கம் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் முயற்சியாகக கலைஞர் மு கருணாநிதி அவர்கள் தீட்டிய "ஒரே முத்தம்" என்னும் சரித்திரக் கற்பனை நாடகத்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

தோழர்களே, திராவிடன் சந்தாதாரராக சேர்ந்து ஆதரிக்க வேண்டுகிறோம்

சிட்டுக் குருவி சத்தின் தாது புஷ்டி லேகியம்

இந்த லேகியம் புருஷர்களுடைய நபும்ஸகம், அல்லது லௌகிக சுகத்தை அனுபவிக்க சக்தி இழந்து போதல் என்னும் துக்ககரமான கொடிய வியாதியைப் போக்கி சுகபோகம் அனுபவிக்கச் செய்யும். மேலும் காம சம்பந்தமான பேச்சுகளை பேசும் பொழுதும். சொப்பனத்தில் வீரியம் இழப்பதும் போன்றவற்றைத் தடுத்து பலமுள்ளவர்களாகச் செய்வது இச்சிட்டுக் குருவின் சத்தின் தாது புஷ்டி லேகியமாகும். இன்னும் விபரீத சேர்க்கையால் ஏற்படும் வியாதிகளான வெள்ளை, மூத்திர எரிச்சல், அடிக்கடி மூத்திரம் போதல், நீர் சுருக்கு, நீரடைப்பு முதலியவைகளை மாற்றி சுகமடைய செய்வதுடன் ஸ்திரி புருஷர்கள் இழந்துபோன தேசவலுவைப் பெற்று அவரவர் அவரகளது தன்மையை அடைந்து மகிழ்ச்சியடையும்படி செய்வது. இச்சிட்டுக்குருவி சத்தின் தாது புஷ்டி லேகியத்தை 48-நாள் சாப்பிடவேண்டும், இதை ஆண் பெண் அனைவரும் சாப்பிடலாம்.

இத்தாது புஷ்டி லேகியத்தை பலவித பஸ்பங்களாலும், பலவித மூலிகைகளாலும் ஒன்பது வகை வித்துக்களாலும், பலவகைவேர்களுடன் கடைச் சரக்குகளும் சேர்ந்து இத்துடன் நெய், பால், தேன் கலந்து பல பிஸ்தாக்களும் ஒன்று கலந்து அதற்குத் தகுந்த முறையில் பதப்படுத்தி மணம் குணம் பொருந்திய உருசியுடன் கூடியது. இதனை அனைவரும் உண்ணலாம். பத்தியமில்லை; சுகமடையலாம். இதனை தொடர்ந்து ஒவ்வொருவம் அருந்தினால் ஆயுள் உள்ளளவும் மற்ற மருந்து அருந்த வேண்டியதில்லை. சிட்டுக் குருவி சத்தின் தாதுபுஷ்டி லேகியத்தில் தாம்பிர பஸ்பம்; அப்ரேக் செந்தூரம், வங்கபஸ்பம் அயச் செந்தூரம், காந்தச் செந்தூரம், கல்நார் பஸ்பம் முதலியவைகளை முறைப்படி செய்து இவை மிகவும் சிறந்த ஔஷதம்.

ஒரு மண்டலம் 48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 2-க்கு ரூ. 6—0—0

ஒரு மண்டலம் வாங்குவோருக்கு போஸ்டேஜ் இனாம்.

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

வியாசர்பாடி, மதராஸ்—12

பிரிட்டிஷ் தேர்தல்

தேர்தலில் பங்கு கொண்ட கட்சிகள் பத்து. அவை கன்சர்வேடிவ், தொழிற் கட்சி, மிதவாதி, பொது உடமை, சின் ஃபீன் (ஐரிஷ்) வெல்ஷ், ஸ்காட்டிஷ், தொழிற் கட்சி சுயேச்சை, தொழிற் கட்சி ஐரிஸ், சுயேச்சைகள் .

கடந்த 1951-ம் ஆண்டு தேர்தலில் மொத்த ஸ்தானங்கள் 625. அவைகளோடு மற்றும் 5 ஸ்தானங்கள் பிரித்துக் கூட்டி, தற்போது 1955 தேர்தலில் 630 ஸ்தானங்களாக உள்ளன. மே 26-ல் தேர்தல் நடந்தது

அந்த 630 ஸ்தானங்களுக்கு **1409** பேர்கள் போட்டி யிட்டனர்.

கன்சர்வேட்டிவ் 624; தொழிற் கட்சி 620; லிபரல் (மிதவாதி) 110; பொதுஉடமை 17; **சின் ஃபீன் (ஐரிஷ்) 12**; வெல்ஷ் 11; ஸ்காட்டிஷ் 2, தொழிற் கட்சி சுயேச்சை 2: தொழிற் கட்சி ஐரிஷ் 1; சுயேச்சைகள் 10, ஆக மொத்தம் 1409 பேர்கள். இவர்களில் வெற்றிபெறவேண்டியவர்கள் 630 பேர்கள் தான். கண்டிப்பாய் தோற்க வேண்டியவர்கள் 779 பேர்கள்! பாதிக்கும் பெரும் பகுதி!

தேர்தலில் போட்டி யிடுபவர்களில் பெண்கள் 92 பேர்கள்.

சின் ஃபீன் (ஐரிஷ்) கட்சிச் சார்பாகப் பன்னிருவர் போட்டி யிட்டார்கள் என்று மேலே கூறினோம். அப்பன்னிருவருள் எண்மர் சிறைக்கூடத்தி லிருப்பவர்கள். ஏன் அவர்கள் சிறைக்கூடம் நண்ணினர்? தென் குடியரசுப் பிராந்தியத்தோடு வட ஐயர்லாந்தையும் இணைத்திட வேண்டிக் குழப்பம் விளைவித்ததாக அவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் தேர்தலில் போட்டிபோடுவதன் நோக்கம் என்ன தெரியுமா?

வெற்றி பெற்ருல், பாராளு மன்றத்தில் உட்கார மறுத்துப் புரட்சி செய்திடல் வேண்டுமென்பது தான்! விந்தைதான்!

எலிசபத் ராணி, மார்க்ரட் சின்ன ராணி, மற்ற ராணி குடும்பத்தைச் சேர்ந்தவர்களெல்லோரும் தேர்தலின் போது, பொது மக்கள் கண்களில் தென்படாதவாறு, மறைவிலேயே இருந்துவிட்டார்கள். அவர்களும் ஓட்டுப் போடலாம். ஆனால் அவர்கள் பரம்பரை வழக்கப்படி வாக்களிக்காது ஒதுங்கிவிட்டனர்.

ஆனல் ராணியின் கணவர் டியூக் ஆஃப் எடின்பரோ, மற்ற 'டியூக்கு' களைப் போன்றே ஓட்டளிக்க அனுமதிக்கப்படவில்லை.

தேர்தல் முடிவு.

டோரிக் கட்சி, 1951இல் இருந்து, ஆண்டு வந்த அதிகாரத்தை இழந்துவிடாமல், வியக்கத்தக்க அளவிலே, இப்போதையத் தேர்தலிலும் வெற்றி கண்டு விட்டது.

முன்பு எதிர்க் கட்சிகளைவிட 18 இடங்களை அதிகமாகக் கொண்டு வென்றது.

இப்போது 60 இடங்களுக்கும் மேலாகப் பெற்று வென்றது.

பெருவாரியான பிரிட்டிஷ் மக்கள் விரும்புவது டோரிக் கட்சி-என்பது மெய்ப்பிக்கப்பட்டு விட்டது

வெற்றிகளின் விவரம்:—டோரிக்கட்சி (கன்சர்வேடிவ்) **345**: தொழிற் கட்சி **277**; மிதவாதி (லிபரல்) **6**; ஐரிஷ்சின்ஃபீன் **2**; ஆக **630** இடங்களின் வெற்றிகள் பூர்த்தியாகிவிட்டன.

நம் கவனததை ஈர்க்கக் கூடிய வகையிலே வென்றவர்களையும், தோற்றவர்களையும் சன்று காண்போம்.

மாஜி தொழிற் கட்சி அங்கத்தினர் தோழர். **சர். ரிச்சார்டு ஆக்லாண்டு**, தம்பதவியை --'ஜலவாயுக் குண்டு, தயாரிக்கக்கூடாது' என்ற பிரச்னையில்--ராஜினமா செய்தார். உடன் உபதேர்தல் நடந்திருக்கவேண்டும். அதற்குள் பொதுத் தேர்தல் வந்துவிடவே அவர் **சுயேச்சை** யாக நின்று போட்டியிட்டார். **பாவம்! தோற்றுப்போனர்**. தோழர். **ஆச்சாரியாரும்** வருத்தம் தெரிவித்துவிட்டார். தோழர். ஆச்சாரியார், ஆக்லாண்டை, இங்கிருந்தபடியே, அறிக்கைமூலம் ஆதரித்தார். அணு, ஜலவாயுக்குண்டு தயாரிக்காதே!-- என்ற குரல் தோற்கடிக்கப்பட்டுவிட்டது!

சர். வின்ஸ்டன் சர்ச்சில்லும், அவரது மருமகன் **டன்கன் சாண்டிஸ்** ஸூம் வென்ருர்கள், (டோரி)

ஹெராஸ்டுமேக் மில்லன் (வெளி விவகார. மந்திரி) என்பாரும், அவரது மகன் **மாரிஸ் மேக் மில்லன்** என்பாரும் வென்ருர்கள் (டோரி)

ரிச்சார்டு வுட் என்பவர்,--லார்டு ஹாலிபாக்ஸின் இரண்டாவது மகன் கடந்த உலகப் போரில் **இரு கால்களையும் இழந்தவர்**. அவர் டோரிக் கட்சியின் சார்பாக நின்று வெகு சுளுவில் தொழிற் கட்சியை முறியடித்து **வென்றுவிட்டார்**,

ஆட்லி வென்ருர். ஆனல் அவரது கட்சி (தொழிற் கட்சி) ஆளும் வகையில் வெற்றி பெறவில்லை, அவருக்கோ வயது 72. இதோடு அடுத்த ஐந்தாண்டு கழித்துத்தான் பொதுத்தேர்தல். அப்போது அவரது 77 வது வயதில் மீண்டும் வென்று பிரதமராக வர முதுமை இடந்தராது என எண்ணுகிருராம்.

பெவான் (தொழிற் கட்சி) வென்ருர். அவரால்தான் தொழிற் கட்சி தோல்வியுற்றது என்று பெரும்பாலோர் கருதுகின்றனர். கொள்கையில் பெவானுக்கும். ஆட்லிக்கும் 'உள்பூசல்' ஆனல் கட்சிக்குள்ளேயே இடதுசாரியாக இருந்துவருகிருர். அவர் சென்னை வந்தபோது நம்மில் பலர் அவரைப் பார்த்தோம்! அவரது பேச்சையுங் கேட்டோம்!

எல்லா அங்கத்தினர்களையும் விட, அதிக வயதான, "பெரிய **தாத்தா**--வயது 84 **டேவிட் லோகன்**--தொழிற் கட்சி-வென்ருர்.

டிட்டோ வாழ்க்கை வரலாறு எழுதிய **ஜிலியாகஸ்** (தொழிற் கட்சி) வென்ருர்.

சின் ஃபீன் (ஐரிக்) கட்சியைச் சேர்ந்த இருவர்---**மிட்செல், கிளார்க்**---வென்ருர்கள் பத்து வருட சிறைத் தண்டனையில் ஐந்து மாதங்களைத்தான் கழித்திருக்கிருர்கள்! வென்ருல் சபையில் உட்கார மறுப்போம் என்று கூறியவர்கள் என்பதை முன்னமே கண்டோம்.

புதிய அரசவை ஜூன், 7ல் கூடும்.

—"நான் தான்"

கால் ஆணிக்கு மேல்பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும் போது பாதமானது தரையில் வைக்க முடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 2-8-0
தபால் சார்ஜ இனம்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
சென்னை-12

கலை அரங்கம்

'உலக்கைக் கொழுந்துகள்?'

1954-ம் ஆண்டில் வெளியான திரைப் படங்களில் சிறந்தவை எவை என்று பேசும் படம் ஆசிரியர் குழுவினர் தேர்ந்தெடுத்திருக்கிருர்களாம்! வைரமாலை, போனமச்சான் திரும்பி வந்தான், நண்பன், விளையாட்டுப் பொம்மை ஆகியவைகள் நடுத்தரப் படங்களென்றும், சொர்க்கவாசல், ராஜி என் கண்மணி ஆகியவைகள் மிகச் சாதாரண படங்கள் என்பது அந்தக் குழுவினரின் அபூர்வ ஆராய்ச்சியாம்!

இம்முடிவை மற்ற ரசிகர்கள் எந்த அளவுக்குப் பாராட்டுவர் என்பதை நான் விவரிக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன். சொர்க்கவாசல், பழமை வெறியை வீழ்த்தும் உயரிய படம். அறிவுடைமையையும் கலை நுணுக்கத்தையும் நிரம்பக் கொண்ட சித்திரம் என ரசிகர்களும் திரைப்பட நிபுணர்களும், மற்ற அறிஞர்களும் பாராட்டி யிருப்பதை இந்த "ஆராய்ச்சியாளர்கள்" மறந்து விட்டார்களா அல்லது மனவளம் குறுகி விட்டதா என்பது தெரியவில்லை.

அடுத்தபடியாக ராஜி என் கண்மணி புதுமை கருத்து நிறைந்த படமாகும். இந்த அபூர்வ ஆராய்ச்சியாளர்கள் நினைப்பது போல ராஜி தன் குழந்தையுடன் முடவன் ராமுவைத் திருமணம் செய்திருந்தால் நல்ல படம் என்று திருவாய் மலர்ந்தருளி யிருப்பார்களா?

அடுத்த ஆண்டிலிருந்தாவது இவ்வித விசித்திர ஆராய்ச்சிகளில் இறங்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படி இறங்கினுலும் திரைப்பட ரசிகர்கள் ஒன்றும் புரியாதவர்கள் என்ற வீண் எண்ணத்தை விட்டு நடுநிலைமையுடன் செயலாற்றுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

அன்பன், **ஏ. ஆர். ஐயப்பன்**
கோலாலம்பூர்—மலேயா

'வறுமையின் கொடுமை'

15—5—55 மாலை 7-மணிக்கு அகமதாபாத் பாப்புநகர் திடலில் மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால் தோழர் அ. வடிவேலு தலைமையில் நடைபெற்றது. கதையை பேரளையூர் வி. இராமசாமியும், வசனம் மேற்படி மன்றக் குழுவினராலும் தீட்டப்பட்டதாகும். புதுவை வைத்தியநாதன் பாடல்களை இயற்றித் தந்தார். நாடகப் பயிற்சியின் பொறுப்பை சு. புரட்சிமாறன் ஏற்று தமது ஆற்றலை எடுத்துக் காட்டினுர். கதை—வசனம், பாடல்கள் அனைத்தும் ரசிகர்களின் ஆதரவைப் பெறும் வகையில் அமைந்திருந்தன. பேரளையூர் வி. ராமசாமியின் நடிப்பு குறிப்பிடத்தக்கதாயும், ஏனைய நடிகர்களின் திறமை பொதுவாக அனைவரும் பாராட்டக் கூடிய வகையிலும் இருந்தன. நகைச்சுவை கோவிந்தராசு, மா. மண்ணு ஆகியவர்களின் கற்பனைக் கூத்து (நடனம்)' நாடகத்தின் சிறப்புக்கு சிகரம் அமைத்ததுபோல காட்சி தந்தன, மன்றச் செயலாளர் சி. தேவராஜ் அனைவருக்கும் நன்றி கூறினுர்,

—**பு. வை.**

"எடுத்துக் காட்டு!"

ஆசிரியர் எம். என். சாமியின் 'எடுத்துக் காட்டு' போளியம்மனூரில் **25-5-55-ல்** நடைபெற்றது. கிராமியப் பகுதியில் இது போன்ற சீர்திருத்த நாடகம் சுவையும்—புதுவரவேற்பையும் தந்திருக்கிறது.

சுவைத்துப் பார்!

டபிள்யூ. பி. டி. எழிலன்

நோப்பாளம்!

என்னடா! சொள்ளைக் கண்ணு! கையிலே படத்தோடு வந்திருக்கிறே! முகத்திலே கோபக்குறி காணுது!

பாருங்கோ! இந்த அக்ரமத்தை! படமா இது! தென்காய்க் குடுமி! மார்பில் பூணூல்! இடையில் மடிசஞ்சி! காலில் செருப்பு! பொன்மேனி! அவன் ஒரு பார்ப்பனனும்!

எதிரே ஒரு கறுப்புப் பறையனும்! முதுகெலும்போடு வயிறு ஒட்டிக் கிடக்குது! மண்டையிலே அடக்கமான முண்டாசு! இடுப்பிலே பாதிதொடைக்குமேலே கிழ்ப்பாய்ச்சிக் கட்டியமுண்டு.

அந்தப் 'பறையன்' அய்யரை அணுகினனும்,

பக்கத்தில் வராதே! தொடாதே! என்று கை நீட்டி அதட்டுகிறாராம் அய்யர்.

தீண்டாமை அனுஷ்டித்ததின் பயனாய் இந்திய அரசியல் 17 வது பிரிவின்படி தண்டனையாம்!

அப்படின்னுக் காட்டி, அய்யரைக் 'கம்பி எண்ணச் சொல்லி' ஜெயிலில் போட்ட மாதிரி படம் போட்டிருக்கான்! ஜூன் 1-ம் தேதியிலிருந்து சட்டமாம்!

இது விஷமத்தன மல்லவோ! அயோக்கியத் தனமல்லவோ! அவமானமா இருக்குங்கோ! இதைப் பார்க்கப் பார்க்க பத்தி எரியுதுங்களே! கிழித்துப் போட்டுவிட்டிருப்பேன்!, உங்களுக்குக் காட்டணுமென்னு அப்படியே கொண்டுவந்தேன்!

இப்படியெல்லாம் படம் போட்டு, விஷமப் பிரச்சாரம் செய்ய சர்க்கார் அனுமதிக்கலாமா! சர்க்கார் காரியாலயங்களிலேயே மாட்டித் தொங்கவிட்டு வேடிக்கைப் பண்ணுகிறார்களே! மேல் சாதிக்காரன் மீது, கீழ்ச் சாதிக்காரனை 'உசுப்பி' விடுகிறார்கள் போலிருக்கே! சர்க்கார் பணம் இப்படிப்பட்ட விஷமச் செய்கைக்கா பயன் படணும்! அடுக்குமா! அநியாயம்!! அநியாயம் உள்ளங் கொதிக்குதுங்கோ—இந்தப் படத்தைப் பார்த்ததிலிருந்து! கிழித்தெறிங்கோ அதை! திருப்பித்திருப்பி பார்க்கிறீர்களே அந்த அநாச்சாரத்தை!

கண்பா சொள்ளைக்கண்ணு பதறுதே கதறுதே இப்படத்தைக் கண்டா உன் உள்ளங் கொதிக்கிறது உன் வயிறு பற்றி எரிகிறது!

அன்று வைக்கத்தில் அன்னை நாகம்மையாரும் தந்தை பெரியார் ஈ. வெ. ராவும், தீண்டாமை ஒழிக்கச் சத்தியாகிரகம் செய்தபோது திருவாங்கூர் சர்க்காரின் கொடுமைகளுக்கு ஆளானார்களே, அப்போது உன் உள்ளங்குளிரவில்லையா! உன் வயிற்றில் பாலூற்றியமாதிரி இருக்கவில்லையா!

அண்ணல் அம்பேத்கார், பள்ளியில் படிக்கும்போது, தண்ணீர் தாகம் என்றார்! மேல் சாதி வாத்தியார், உயர் சாதிப் பையனை அனுப்பி, குழாய் திறக்கச் சொல்லி, அம்பேத்காரை, குழாயையும், தண்ணீரையும், தீண்டாமல், ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபடி, குழாயில் வந்தத் தண்ணீரை வாயில் ஏந்திக் கொள்ளச் சொன்னாரே! அதைக் கண்டு நீ களிக்கவில்லையா!

அதே அம்பேத்கார்—கரும் பலகையில் கணக்குப் போடச் சென்றபோது, பலகைப் பக்கமுள்ள சோற்று மூட்டைகள் தீட்டுப்பட்டுவிடும் என்று உயர்சாதிக்காரர்கள் கூக்குரலிட்டு, அம்பேத்காரை விரட்டினார்களே! அப்போது உனக்குப் பெருமையாயிருக்கவில்லையா?

குருகுலத்திலே வ. வே. சு. அய்யர் ஓமந்தூரார் மகனை வெளியே தள்ளி தனியே சோறுபோட்டு தனது ஜாதி புத்தியைக் காட்டினாரே! அன்று உனக்கு அகங் குளிரவில்லையா! இன்னும் எத்தனை எத்தனை! சம்பவங்கள்!!! புராணத்தைக கிளறினால் அழுத ஏடு இடங் கொடாதே!

அப்போதெல்லாம் கொதிக்காத உள்ளம்! எரியாத வயிறு! இப்போது இந்தப் படத்தைப் பார்த்தால் கொதிக்குதா! எரியுதா!

சொள்ளைக் கண்ணு நண்பா! உள்ளதைச் சொன்னால் ஏண்டா நோப்பாளம் உனக்கு!

ஆமாங்க! இப்போதாங்கோ புரியுது! 'உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு நோப்பாளம்!' என்பது, ரொம்ப நன்றிங்கோ! வாரேன்!

புரட்சி வீரரா நேரு?

பிரதமர் நேரு ஒரு காஷ்மீரிப் பார்ப்பனர். அவரது 'பனியனு'க்குள்ளே பூணூல் இருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறோம். நேரு பூணூலோடு காட்சியளிக்கும் படத்தை அமெரிக்கன் 'லைப்' 'மேகசைனி'ல் நம்மில் பலர் கண்டுமிருக்கிறோம். தாம் ஒரு பார்ப்பனராய் பிறந்தோமென் பதில பூரிப்பும் பெருமிதமும் கொள்பவராம் நேரு. இவ்வாறு பட்டாபி சீதாராமய்யா கூறுவது, ஒய். ஜி. கிருஷ்ணமூர்த்தி என்பார் எழுதிய 'நேரு வாழ்க்கை வரலாறு' புத்தகத்தின் முன்னுரையில் காணக் கிடக்கிறது. நேருவைப் போன்று அவரது சகோதரி விஜயலட்சுமி பண்டிட்டும், 'எனதுடலில் பிராமண இரத்தம் ஓடுகிறது என்பதில் நான் ஏன் பெருமைப் படக்கூடாது!' என்று கேட்பவராம். அகில இந்தியப் பெண்கள் சங்கம் 1940-ல் கூடி மக்கள் கணக்கெடுப்பின் போது யாரும் சாதிப் பட்டத்தை காட்டிக் கொள்ளக் கூடாதென்று விரும்பினார்களாம். அதுசமயம்தான் பண்டிதை அம்மையார் அதை எதிர்த்து, அவர் ஒரு பார்ப்பன வகுப்புமாது என்று மக்கள் கணக்கெடுப்பில் பெருமையோடு கூறிக் குறித்துச் கொள்ளச் சொன்னாராம்.

[இப்படிக்கு ஆதாரம் என்னவென வினவுவோர்—புரட்டுங்கள் பக்கம் 208 209 'காங்கிரசும் காந்தியும், தீண்டாதாருக்கு என்ன செய்தது!' என்று அம்பேத்கார் எழுதியப் புத்தகத்தை.]

நேரு பார்ப்பனராலும், சனாதனக் கூட்டத்தைச் சேர்ந்தவரன்று. சனாதனக் கூட்டத்திற்கு அவர் ஒரு வெடிகுண்டு! அதனால்தான் அவரைக் 'கொல்ல'ச் சதிதிட்டங்களும் தலைகாட்டுகின்றன. சமீபத்தில் நடந்திட்ட 'நாகபுரிச் சம்பவமே' போதிய சான்றாகும்.

அன்று 1947-ல் சுதந்திரத்தை நடுஇரவு பனிரெண்டு மணிக்கு 'பூரண கும்பத்'தோடுதான் வரவேற்க நேர்ந்தது. ஆனால் அதை யுணர்ந்த நேரு, இந்திய சட்ட ஏட்டில், இந்தியா மதச்சார்பற்ற நாடாகத் திகழும் எனத் தீட்டுவித்தார். அந்நாளிலிருந்து இந்துமகா சபையும், ஆர். எஸ். எஸ். சங்கமும், அதை எதிர்த்து வசைபாயிட்ட வண்ணமே இருக்கின்றன.

மதச்சார்பற்ற நாடு என்று கூறிக்கொண்டு நேரு ஏன் முழுக்க முழுக்க இந்துப் பண்டிகையான 'கும்பமேளா'வில் பிரதமர் என்கிற முறையிலும் வி. ஐ. பி. (அதிமுக்கியப் பேர்வழிகள்) என்ற மகுடத்துடனும், பங்கு பெறுகிறார்! என்று நினைக்குமிடத்தில்தான், **புரட்சி வீரரா நேரு?** என்ற கேள்வி எழுகிறது. ஆனால் சுலபத்தில் அவரைப் புரட்சிவீரர் அல்ல என்று கூற முடிவதில்லை.

அஹமதாபாத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் 10ம் நாள் ஆடை ஆராய்ச்சிக்கழகம் (Textile Research Association) ஒன்றைத் திறக்கச் சென்றார் நேரு. இந்து தர்மப்படி சகல வேத பாராயணங்களும் ஓதப்பட்டு, ஓமம் வளர்த்தி தூப தீபங்காட்டி பிறகு நேருவின் நெற்றியிலும் 'திலகம்' வைக்கிற வரையிலும் பொறுமை இழக்காதுதான் இருந்தார் நேரு! ஆனால் 'வஸ்து' சடங்கு ('Vastu' Ceremony) செய்ய வேண்டி, நேரு அவர்களைப் பிடித்து கையைக் கொண்டு கட்டிடத்தின் சுவற்றைத் தொடச் சொன்னார் புரோகிதர். அவ்வளவுதான். பொறுமை இழந்தார் நேரு! ஆவேசங் கொண்டார் நேரு! ஒரே 'புரட்சி!' 'அதற்கெல்லாம் வேறு ஆளைப் பாருங்காணும்'—என்று கூறிக் கொண்டே நேரே விடுவிடு என்று கட்டிடத்துக்குள் நுழைந்தே சென்றிட்டார்.

மதத்தை அரசியலில் புகுத்திக் குட்டையைக் குழப்புகிறாரே மகாத்மா காந்தி! உண்ணாவிரதமிருக்கச் சொல்லிக் கடவுள் நேரே வந்து அவருக்குச் சொல்லுகிறாராமே! — இதெல்லாங் கேட்டால் எனக்கு மகா எரிச்சல் வருகிறது!—என்று அவரைப் பற்றிய அவரது புத்தகத்திலேயே எழுதி வைத்திருக்கிறார் நேரு.

ஜோசியத்திலும், ஜாதகத்திலும் அறிவை இழக்கிறார்களே மக்கள், 'தன்கையே தனக்குதவி' என்று உழைத்தால்தானே மக்களும் நலம் பெறுவர், நாடும் உருப்படும்—என்று கடந்த ஆண்டு ஜூலை எட்டாம் நாள், நங்கலில் பேசி யிருக்கிறார் நேரு.

தாங்கள் கோயில்களுக்குச் சென்று சாமிகும்பிட்டீர்களா! என்று கேட்டால் இல்லை! இல்லை! அங்கேயுள்ள கலையழகை யல்லவோ பருகிப் பூரித்தேன்! எனக்குச் சாமி கும்பிடும் பழக்கமுமில்லை நம்பிக்கையுமில்லை என்கிறார் நேரு!

மகாபாரதம், இராமாயணம் போன்ற நூல்களெல்லாம் ஆதிகாலத்தில் 'விஷமத்துடன்' ஒரு தலைப்பட்சமாக எழுதி வைத்துக் கொள்ளப்பட்டவை! அவை இக்காலத்துக்குத் தக்கவாறு மாற்றியமைத்து திருத்திடல் வேண்டுமென்று கூறுபவர் நேரு!

ஏகலைவன் வலக்கைக் கட்டைவிரலை 'குருதட்சணை'யாக வெட்டிக் கொடுக்கும்படிக் கேட்டு துரோணர் பெற்றுக் கொண்டது—அடாதது! கூடாதது! தற்காலத்திற்கேலாதது! என்று அழுத்தந்திருத்தமாக ஒரிஸ்ஸாவில் சமீபத்தில் கூறினார் நேரு. இச்சம்பவம் மகாபாரதத்திற்கே இழுக்கு என்று கோபாவேசத்தோடு கூறி பாரதத்தை மாற்றியே எழுதித் தீரவேண்டுமென்றார்.

தில்லிப் பாராளுமன்றத்திலும் அவ்வப்போது புரட்சிக் கருத்துக்களை அள்ளித் தெளித்தவாறேயுள்ளார்.

இந்துப் பித்தர்களுக்கு அவ்வப்போது சுடச்சுடச் சவுக்குக் கொடுத்து வருவதை நாம் செய்தித் தாள்கள் வாயிலாகப் பார்க்கிறோம்.

சொத்துச் சுதந்திரங்களைத் தெய்வமாகப் பாவித்துப் பூசை போடக் கூடாது. 'காதறுந்த ஊசியுங்கூட வாராது காண்...' என்று கூறுகிறார், இவ்வாறு சொத்துரிமை மசோதா மீது பேசியிருக்கிறார்.

பசுவதைப் பேச்சு வந்தபோதும் இந்து மதப் பித்தர்கள் கூறுவதற்குச் சரியான ஆப்பு அறைந்திருக்கிறார். என்னிடம் பூச்சாண்டி காட்டாதீர்கள். இப்போது வேண்டுமானாலும் எனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிடுகிறேன். தேர்தல் நடத்துங்கள் நான் எனது கொள்கையை மக்கள் முன் சொல்லுகிறேன். நீங்களும் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள், எனது கொள்கையில் வெற்றிகண்டு மீண்டும் பாராளுமன்றம் நுழைந்து காட்டுகிறேன் என்று சவால் விடுத்தார்—நேரு. பசுப் பிரச்னையை விட மக்கள் பிரச்னைதான் பெரிது என்று வாதாடினார்.

சில தினங்களுக்கு முன்பு ஹரித்துவாரத்திற்குச் சென்றார். அங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது ஹரித்துவாரம் இந்துக்களுக்கு யாத்திரை ஸ்தலமாக இருக்கலாம். புண்ய க்ஷேத்திரமாக இருக்கலாம். ஆனால் என்னுடைய புண்ணிய க்ஷேத்திரங்களும், யாத்திரை ஸ்தலங்களும் சமூக நல அபிவிருத்தித் திட்டத்தை ஏற்றுச் செயலாற்றும் ஊர்களேயாகும் என்றார்.

அதோடு சாதுக்களைப்பற்றியும் கூறியுள்ளார். நம் நாட்டில் கிட்டத்தட்ட எண்பது இலட்சம் (80,00,000) சாதுக்கள் இருக்கிறார்கள். அவர்களத்தனைபேரும் உண்மைச் சாதுக்கள் அல்ல! போலி வேடதாரிகள் அநேகருண்டு! அவர்களால் நாட்டிற்குத் தீமைதான்! காவி உடை தரித்தவனெல்லாம் "சாமியார்" ஆய்விடமாட்டான்! "மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம் பழித்தது ஒழித்துவிடின்" என்ற குறளோவியத்திற்கொப்பப் பேசியிருக்கிறார் நேரு! சாதுக்களை மதிப்பதால் சோம்பேறிகளை உண்டுபண்ணுகிறவர்களாவோம் என்றுங் கூறுகிறார்.

ஆக நேருவின் இத்தகையக் கூற்றுகளைத் திரட்டி நோக்குமிடத்து அவர் ஒரு புரட்சி வீரராகவே காட்சி யளிக்கிறார்

ஆனால் ஒன்று. அவர் இதுவரை எண்ணத்தில் தான் தம்மை ஒரு சீரிய நோக்குக் கொண்டவர் எனக் காட்டிக் கொண்டிருக்கிறார். செயலில் சூன்யந்தான். காரணம் அவரைச் சூழ்ந்திருப்பவர்கள் பெரும்பாலோர் அவரது கருத்துக்களுக்கு முரண்பாடுடையவர்கள். எனவே அவரது எண்ணப்படி செயலில் புரட்சி காட்ட முடியவில்லை. காலமும் அவருக்கு இன்னும் ஒத்துவரவில்லை. ஒருவேளை தற்போது மேற்கொண்டுள்ள ருஷ்ய நாட்டுச் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு செயலிலும் புரட்சியைப் புகுத்திக் காட்டுவாரா என்பது பொருத்திருந்து பார்க்க வேண்டியதொன்றுதான்!

சரி! அவர் அடிக்கடி 'நான்சென்ஸ்' என்று கூறுகிறாரே! அது கிடக்குது, 'நான்சென்ஸ்!' அது இங்கே வேண்டாம்.

ஆசிரியர் அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், தோழு அச்சகம் 15, நிலேயன்ஸ் ஸைஸ் மில் தெரு, சென்னை-1.